# தோழி

★ கலை, இலக்கியம் போராட்டத்துடன், இரண்டறக் கலந்து தீர்வுகளைத் தெளிவாக மக்கள் மத்தியில் வைக்க வேண்டும்.

★ பெண் எனும் பெயருக்குள் பூட்டிக்கிடக்கும் விலங்குகளைத் தகர்த்தெறிய ....

★ .... வைரம் தோய்ந்த நெஞ்சங்கள் கோடி பெருகிட வேண்டும்



2

ரூபா 3·50

A. Thiviyagathi

# தோழி

" விடுதலைக்கு மகளிரெல்லோரும்
வேட்கை கொண்டனம் " -- பாரதி

---

இனிய என் தோழிக்கு,

பெண்களுக்குள்ள பிரச்சினைகளைப்பற்றிச் சிந்திப்பவர்கள் நிறையவே இருக்கிறார்கள் என்பதனைப் பல்வேறிடங்களிலுமிருந்து வந்த கடிதங்களும் நேரடியான அறிமுகங்களும் தெரிவிக்கின்றன. காலங்காலமாக அடிமைப்பட்டு, அடக்கு முறைகளுக்குள் ஒடுங்கிப் போய்வாழ இனிமேலும் முடியாதென்ற அவர்கள் துடிப்பினை நாம் உணர்ந்திருக்கிறோம். இந்த வகையில் நம்மைப் பாதிக்கின்ற வெளிப் புறக் காரணிகளும் உள்ளன.

* இன்றைய திரைப்படங்கள், கதைகள், கவிதைகள் என்பவற்றில் பெண்விடுதலை பற்றிய கருத்துக்கள் ஓரளவு இடம் பெறுகின்றன ஆனால் அவற்றில் சரியான விளக்கமோ, தீர்வோ கொடுக்கப்படுவதாக இல்லை.
* 'கலை' இலக்கியம் போராட்டத்துடன் இரண்டறக்கலந்து தீர்வு களைத் தெளிவாக மக்கள் மத்தியில் வைக்க வேண்டும்' என்ற வாசகத்தை எமது கலை இலக்கியவாதிகள் முழுமையாக, எப்போது உணர்ந்து கொள்வார்களோ தெரியாது.

  இவைபற்றி நாம் சிந்திக்கும்போது, பிரச்சினைகளை எடுத்துரைப் பதுடன் மட்டும் நின்று விடாமல் சரியான பாதையினையும் தெரிந்தெடுக்க வேண்டும் என்பது தோழியின் கடமையாகும்.
* இன்று நாம் ஒடுக்கப்பட்ட சமூக பொருளாதார முறைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனுள் பெண்ணடிமை முறையும் அடங்குகிறது. சமூக பொருளாதாரத்தின் சரியான அமைப்பு முறையில்தான் பெண்களுக்கான உண்மையான விடுதலை கிடைக்கும்.

  எனவே,

  பெண்விடுதலையும் ஒரு சமூகமாற்றத்திற்கான போராட்டமே; இந்த வகையில் நாம் எமக்குரிய உரிமைகளை வென்றெடுக்க ஒரு பொதுமைப்பட்ட போராட்டத்தை நடத்துவதற்காக முன் வர வேண்டும்.

  தோழி!

  மேற்கத்தைய தேசப் பெண்விடுதலைப் போராட்டங்கள் நமது விடுதலையைத் திசைமாற்றி முதலாளித்துவத்தின் கலாச்சாரச் சீரழிவாகவே காட்டியுள்ளன. இவை நமது பாதையை மழுங் கடிக்கும்.

  இவற்றிலிருந்து......

  எமது போராட்ட உணர்வை சரியான சிந்தனையினூடாக வளர்த்துக்கொள்ள நாம் அனைவரும் உணர்வு பூர்வமாக அணி திரள்வோம்.

— தோழி

# தோழிக்கு......

என் உயிர்த் தோழி!

அடுப்படி அந்தப்புரத்தில்
நெருப்புடன் போராடி
வியர்வையில் குளித்து
சிறிது விடுதலையடைந்து
முற்றத்தில் அமர்ந்தேன்

அ . ப்...ப...ப் பா!
"பெண் எனும் பெயருக்குள்
பூட்டிக் கிடக்கும்
விலங்குகளைத் தகர்த்தெறிய...."
என் சிந்தனையில்
சிக்கிச் சுழலும்
எத்தனையோ உண்மைகள்
வெளிச்சத்திற்கு
வரமுடியாமல்
தவித்துக் கொண்டிருந்தன.

அந்நேரந்தான் ......

பெண் இனத்தின்
உதய தாரகையாய்
புரட்சியின் உருவாய்
என் கரங்களுக்குக்
கிட்டினாய்

"தோழி" நீ.

ஆம்,
நீ தான் —
அந்தப் பெருமைக்குரியவள்
நீயே தான்
அந்த இனியவள்

இருண்ட பெண் வாழ்வின்
கலங்கரை விளக்கமாய்
வந்து
உன் நட்புக்
கரத்தை நீட்டினுய்,
அந்தப் புரட்சிக்
கரத்தை
நான்
இறுகப் பற்றிக்
கொண்டேன்
ப்ரிய தோழி....!

நான்
உன்னேடு
என்னையும்
இணைத்துக் கொண்டேன்.
வா!
நாமிருவரும்
சேர்ந்து நடப்போம்
இருட்டறையில்
முடங்கிக் கிடக்கும்
நம் தோழியரின்
துயில் கலைக்க...
நெருப்புக் கொள்ளியுடன்
போராடும்
நம் சிநேகையரின்
வெம்மை போக்க....
"பெண் விடுதலை"
எனும் தீபத்தை
நம் நாட்டில்
ஏற்ற....
வா!
தோழீ!
நாமிருவரும்
சேர்ந்து நடப்போம்.

— சூரியா —

# இருட்டில் ஒரு மின்னல்

— க. புவனேஸ்வரி

கற்புநிலையென்று சொல்லவந்தார் – இரு
கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம் – பாரதி.

''அவன் என்னவானாலும் உனக்குத் தாலிகட்டிய புருஷன் அவன் மனம் நோக விடப்படாதம்மா''

அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டு அப்படியே இருந்தாள். இரண்டு வாரமாக இப்படித்தான் ஆள்மாறி ஆள் வீட்டிற்கு வந்து... இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டு இருப்பார்கள். இன்று எல்லோரும் கூட்டமாக வந்திருந்தார்கள்.

''இப்ப அவன் என்ன உன்னை அடிச்சு முறிச்சுக் கொடுமைப் படுத்தினவனே. இப்புடி வன்மம் காட்டின...''

''அவன் என்ன பெண்புடிகாறன் மாதிரி ஊரெல்லாம் மேஞ்சு திரிஞ்சவனே. ஏதோ சபலத்திலை பிழை விட்டிட்டான்.''

''இப்புடியெல்லாம் குடும்பத்திலை நடக்கிறதுதான். நாம பெண்கள் தான் அனுசரிச்சுப் போக வேணும்.''

அவள் பதில் எதுவும் பேசவில்லை.

அம்மா, மாமி, பெரியம்மா, மூத்தக்கா... இன்னும் அவளில் அக்கறை கொண்ட யார் யாரோவெல்லாம் தங்களுக்குள் பேசுவது போல அவளை அரட்டிக் கொண்டிருந்தார்கள்.

★ ★ ★

சுவரில் அவள் திருமணப் போட்டோ. 'பளிச்'சென்ற புன்ன கையோடு கணவனுடன் கரம் கோர்த்தபடி நாணத்தை விழுங்கிக் கொண்டு நின்றாள் அவள்.

அந்தப் போட்டோவில் அவள் கணவனின் வசீகர முகத்தைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்து விட்டுத் தலையைக் கவிழ்ந்து

கொண்டாள் ராதா. எந்தப் பெண்ணையும் ஆகர்ஷிக்கும் ஆண்மையின் பிடிவாதம் அவன் கண்ணில் எப்பொழுதும் போல அமைதியாக உறங்கிக் கிடந்தது.

''காந்தன்! எனக்குத் துரோகஞ் செய்ய உங்களுக்கு எப்படி மனசு வந்தது?''

அவள் புழுவாய் நெளிந்து கொண்டிருந்தாள். எல்லோரும் அவளைச் சூழ்ந்து கேள்வியால் துளைத்தெடுத்தார்கள்.

''ராதா... இங்கை வாம்மா!''

அப்பா சாய்மனைக் கதிரையில் இருந்தபடி அவளைக் கூப்பிட்டார். அவளுக்கு அது ஆறுதலாக இருந்தது.

காந்தன் கற்பகத்தோடு கொண்ட உறவு தெரிந்த பின்பு இரண்டு வாரங்களுக்கு முன் பொங்கி வெடித்துக்கொண்டு புருஷனை விட்டுப் பிரிந்து வந்த ராதாவை அன்போடு அணைத்து ஆறுதல் படுத்திய பின்பு அப்பா அவளுடன் எதுவும் பேசவில்லை. உறவினர் வந்து அவளுக்குப் புத்தி சொல்லும்போது கூட அதிலொன்றும் தனக்கு ஆர்வமில்லாதவர்போல் பேசாமல் இருந்து விடுவார். இப்போது திடீரென்று அப்பா அழைத்தபோது, ராதா முகத்தைத் துடைத்துவிட்டு எழுந்து சென்றாள்.

''ராதா! நீ எனக்குப் பாரமாக வந்ததாக ஒரு பொழுதும் தப்பிதமாக நினைக்கக் கூடாது. இது உண்ட வீடு. இங்கே வாறதுக்கு உனக்கு எப்பவும் உரிமையிருக்கு. ஒரு பெண்ணுக்குப் பெருமை புருஷனோடு வாழறது தான் அம்மா.''

மென்மையாகக் கூறிவிட்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தார். அவள் முகம் சலனமற்றிருந்தது. மூச்சை உள்ளெடுத்துக் கொண்டு அவரே தொடர்ந்தார்.

''நீ காதலிச்சு, காந்தனையே கைப்பிடிக்க வேணுமெண்டு கல்யாணத்துக்கு முன்னம் என்னோட சண்டை போட்டியே. அப்போ உன்னை நான் பெரிசா மதிச்சன். ஏன் தெரியுமா? காதலிச்சவனைக் கைப்பிடிக்கிறதுதான் ஒரு பெண்ணுக்குப் பெருமை. அதனாலதான் எனக்குப் பிடிக்காட்டியும் உன் கல்யாணத்துக்குச் சம்மதிச்சன்.''

அவள் பழைய நினைவுகள் மீளப் பெற்றவளாக கண்களை அகல விரித்து அப்பாவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ராதா! நீ ஒரு தமிழ்ப் பெண்ணம்மா. நாம வாழுற சமூகம் தமிழ்ச் சமூகம். என்னதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும், நாகரிகம் மாறினாலும் எமக்கென்றே மாருத சில அம்சங்களும் எங்களுக்கு இருக்கம்மா......புருஷன் தும்மினாலும் விவாகரத்துச் செய்யிற மேல் நாட்டுக் கலாச்சாரம் எங்களுக்குச் சரிவராது. புருஷனை விபச்சாரிகளிடம் கூடையில் சுமந்து திரிந்த நளாயினியைத் தெய்வமாக வழிபடும் பெண்கள் எங்கள் பெண்கள். நான் உன்னைப் பட்டிக்காட்டுத்தனமாக வாழச் சொல்லல்ல. எங்கட சமூகத்துக்கு இசைவா வாழத் தெரியவேணும் என்கிறன்."

அவள் ஏதோ பேசப் போகிறாள் என்று எதிர்பார்த்தவர்போல் அவர் பேச்சை நிறுத்தினார். அவள் அதற்குத் தயாரில்லாதவள் போல அவர் பேசுவதைத் தொடர்ந்தும் கேட்பதற்கு ஆயத்தமாக அப்படியே இருந்தாள்.

"காந்தன் தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறான்...... இதுக்கு மேல ஒரு ஆம்பிளை இறங்கிவர வேணுமெண்டு எதிர்பார்க்க ஏலாது. அவன் விட்ட தவறை மன்னிச்சிடு. அவன் உன்ர புருஷன். அவனுக்கு நீதான் மனைவி. அந்த உரிமையை வீம்புக்கு இழந்திடாதை."

★ ★ ★

மனதைக் கல்லாக்கிக் கொண்டு வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள் ராதா. இனம் புரியாத அச்சமும், அருவருப்பும் அவள் உடம்பை இலேசாக நடுங்கச் செய்தது. ஒரு மாத இடைவெளியின்பின் கண்ட எதிர் வீட்டுக்காரி வாசலிலே வழிமறித்துக் குசலம் விசாரித்த போது கூட அவளோடு பேசத் தயக்கமாய் இருந்தது. ஒரு புதிய சூழலுக்கு வந்து தன்னை இசைவு படுத்த முடியாதபடி ஒருவித தவிப்பு அவளுக்கு.

வீடு என்றும் போல் சுத்தமாக இருந்தது அவளுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. காந்தன் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதில் அளவு கடந்த ஆர்வம் காட்டுவான். யன்னல்களில் இரண்டை மட்டும் திறந்து விட்டு வழமையாக அவள் அமரும் அதே சோபாவில் அமர்ந்து முகட்டையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்கு எதிர்த்தாற் போலிருக்கும் இரட்டை சோபாவில்தான் வழமையாகக் காந்தன் இருந்து குழந்தைபோல் சிரித்துச் சிரித்துப்

பேசி இவளைக் களிப்பூட்டுவான். அந்த வேளைகளிலெல்லாம் இன்னும் ஏழெழு ஜென்மத்துக்கும் அவனே கணவனாக வரவேண்டும் என்று எத்தனையோ முறை மானசீகமாக வேண்டியிருப்பாள்.

''காந்தன் என் முதுகில குத்திட்டீங்க......''

அந்த இரட்டை சோபாவில் அவன் இல்லை. அதன் எதிரில் இருக்கப் பிடிக்காதவளாய் எழுந்து அறைக்குள் சென்றாள்.

கற்பகம் போன தீபாவளியில் தான் முதன் முதல் ராதாவுக்கு அறிமுகமானவள். ஏ. எல். வகுப்பு மாணவிகளைப் பற்றிய ஒவ்வொரு விபரத்தையும் ஏற்கனவே காந்தன் கூறியிருந்ததால் கற்பகத்தோடு விரைவாகவே ஒட்டிக் கொள்ள ராதாவால் முடிந்தது.

''காந்தன், உங்க மாணவிகளைச் சொந்தப் பிள்ளையா மதிக்கிறன் எண்டீங்களே அதை நம்பித்தானே கற்பகத்தை என்ர மகளாக நினைச்சு அன்பு காட்டினனான். ரெண்டு பேருமா என்னை வஞ்சித்திட்டீங்களே!''

— நெஞ்சம் அனலாய்க் கொதித்தது.

''ஆத்ம துரோகம்?''

— தனிமையில் வெந்து புழுங்கினாள்.

எதிரிலிருந்த கண்ணாடி பீரோவைத் திறந்தாள். மேல்தட்டில் வழமையாக உள்ள இடத்திலேயே சில்வர் நகைப்பெட்டி இருந்தது. அதைத் திறந்து கையில் கிடந்த நகைகளைக் கழற்றி உள்ளே வைத்தவள் பெட்டியின் அடியில் கிடந்த அதை மெதுவாக எடுத்தாள்.

— இருதய வடிவில் அரை அங்குல நீளமான திறந்து மூடக் கூடிய பதக்கம்!

வழமையாக அந்தப் பெட்டியைத் திறக்கும் வேளையில் எல்லாம் மறந்து விடாமல் அந்தப் பதக்கத்தையும் உடனே எடுத்துத் திறந்து பார்ப்பாள். காந்தன் வசீகர கண்களோடு அதனுள் இருந்து அவளைப் பார்த்து முறுவலிப்பான்.

— அது அவளுக்குக் கொடுத்த முதல் பரிசு!

''ஐயோ, இவ்வளவு செலவுசெய்து ஏன் இதை வாங்கினீங்க, சிம்பிளா வாங்கியிருக்கலாமே.''

''ராதா, அப்படிச் சொல்லாதே, இது வெறும் பரிசில்லை என் இதயத்தையே உனக்கு ஒப்படைக்கிறேன். இதைவிட வேறு எதையும் உனக்குத் தரும் நிலையில் நான் இல்லை. சந்தோஷமாக எடுத்துக் கொள்.''

ஒவ்வொரு முறை அந்தப் பதக்கத்தைத் திறந்து பார்க்கும் பொழுதும் அவன் ஒருகணம் தோன்றி அப்படியே கூறி மறைவான்.

— கண்கள் பனிக்க பீரோவை மூடினாள்.

அந்த வீட்டின் ஒவ்வொரு பொருளும் அவள் காந்தனுடன் களிப்புடன் வாழ்ந்த வாழ்க்கையை எத்தனைபோலி என்று பாவனை காட்டி நெஞ்சை முள்ளாய்த் தைத்து, வதைத்தது.

— பழைய காயத்திலிருந்து வழியும் குருதியாய் அவள் நெஞ்சம் கசிந்து உருகியது.

இவ்வளவு வேதனை இந்த வீட்டில் காத்திருக்கும் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. தனிமையில் குமுறிக் குமுறி அழுதவள் அந்தக் கவலையின் தாலாட்டில், பயணக் களைப்பின் அசதியில் அப்படியே தன்னை மறந்து நித்திரையானாள்.

மாலையில் வீடு வந்ததும் காந்தனுக்கு முதலில் திடீர் அதிர்ச்சியாய் இருந்தது. பின்பு மகிழ்ச்சி கலந்த பரபரப்பில் ஒரு கணம் தன்னை மறந்து அவளைய பார்த்துக் கொண்டு நின்றான். அவள் கண் விழிப்பதற்கு முன்னமே தன்னைச் சுதாகரித்துக் கொள்ள வேண்டி, இழந்து போன அந்த மலர்ந்த முகத்தை மீண்டும் வரவழைப்பதற்கு தனக்குள்ளேயே கடுமையாகப் பிரயத்தனப் பட்டுக் கொண்டு நின்றான் அவன்.

''ராதா! எப்ப வந்த நீ. அப்பா வரவில்லையா?''
— அவள் எழுந்தபின் மெதுவாகக் கேட்டான் காந்தன்.
— தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே கூறினாள்.

''இல்லை, தனியாத்தான் வந்தனான்.''
''சாப்பிட்டியா?''

— அவள் மௌனமாக அப்படியே இருந்தாள்.
— அவன் புரிந்து கொண்டு எதிரே இருந்த ஹோட்டலுக்கு பாய்ந்து ஓடினான்.
— தலையை நிமிர்த்தி அவனது வேகமான நடையைக் கூர்ந்து பார்த்தவள் தனக்குள்ளே முணுமுணுத்தாள்.
''காந்தன்! உங்களுக்கு எப்படி முடிஞ்சுது இந்தத் துரோகத்தைச் செய்ய?''

அவன் திரும்பி வரும் பொழுது அவளுக்குப் பிடித்தமான முட்டை பற்றீசையும், கட்லட்டையும், கொண்டு வந்து அவள் முன்னே வைத்தான்.

''சாப்பிடு ராதா''

அவள் சாப்பிடும்பொழுது பாத்றூம் சென்று முகத்தை அலம்பி விட்டு வந்தவன் முகத்தைத் துடைத்துக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தான்.

''ராதா! உனக்கு என்னிலே கடுங்கோபம் இருக்கும். ஒரு மனேவி என்ற வகையிலே என்னைக் கண்டிக்கிறதுக்கும், தண்டிக்கிறதுக்கும் உனக்கு உரிமையிருக்கு. உன்ட கோபத்தை நான் புரிஞ்சு கொள்ளுறன். நான் செய்தது பெரிய பிழைதான். என்னை மன்னிச்சிடம்மா.''

அவன் கண்கள் பனிக்கத் தலையைக் குனிந்து கொண்டு கூறினன். அந்த ஆண்மையின் தலைகுனிவும் அப்போது அவளுக்குப் பொறுக்க முடியாததாகவேயிருந்தது.

சாப்பிடுவதை நிறுத்திவிட்டு பிளாஸ்கில் இருந்த தேநீரை இரு கோப்பைகளிலும் ஊற்றி ஒன்றை அவனிடம் நீட்டினள். நீண்ட மௌனத்தின்பின் அவன் தேநீரை உறிஞ்சும் பொழுது அவள் விம்மலோடு கேட்டாள்.

''காந்தன்! நடந்த விஷயம் என்னைப் பொறுத்தவரை தாங்க ஏலாதது. ஆனல் நான் எப்படியும் இதைத் தாங்கியாக வேணும்.''

— வழிகின்ற கண்ணீரைத் துடைத்து, மூக்கையும் உறிஞ்சியவள் தீர்க்கமாகக் கூறினள்.

''நான் உங்களோடு வாழப்போறது உறுதி. நீங்க எனக்குச் செய்தது துரோகம். என் ஆத்மாவைக் கொன்னிட்டீங்க. அதன் பரிசுத்தம் உங்களுக்கு விளங்கல்ல. ஆனலும் பரவாயில்லை. நான் உங்களோட வாழுறதெண்ட முடிவுக்கு வந்திட்டன்...... இருந்தாலும் உங்களுக்கு உறவு எப்படி ஏற்பட்டதெண்டு சொல்லுங்க. எனக்கு ஒரே குழப்பமாக இருக்கு...... என்னை மீறி இன்னெருத்தியோட உறவு கொள்ள உங்களுக்கு எப்படி மனசு வந்தது. இந்த உண்மை எனக்குத் தெரிஞ்சு ஆகவேணும்.''

— அவள் விம்மிக் கொண்டே இருந்தாள்.

கலவரத்துடன் அவள் அழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தவன் பாதி குடித்த தேநீர்க் கோப்பையை அப்படியே கீழே வைத்தவன் ஆழ்ந்த யோசனையோடு ஒரு கணம் கலவரப்பட்டவன் மறு

கணம் ஒரு முடிவுக்கு வந்தவனாக கைகளிரண்டையும் நெற்றிக்கு அணையாய்க் கொடுத்து நிலத்தையே பார்த்துக் கொண்டு கரகரத்த குரலில் சொன்னான்.

''ராதா! நான் மற்ற மாணவிகளைப்போல கற்பகத்தை சொந்த மகளாகக் கருதித்தான் அன்பு காட்டினேன். கடைசி நிமிசம் வரைக்கும் அப்படித்தான் இருந்தன். ஆனால், அவள்தான் அதைப் பிழையாய்க் கற்பனை பண்ணிட்டாள்...... பாவம் அவள்! வீட்டிலை அன்புக்காக ஏங்கிறவள். அவளில அன்பு காட்ட யாரும் இல்லை. எல்லோராலும் வஞ்சிக்கப் பட்டவள் அவள். அவளிட கண்ணீரையும் கெஞ்சலை என்னால் மீற முடியாமல் போயிற்று...... ஓர் ஆதரவிற்காக ஏங்கிய அவளை என்னால் நிராகரிக்கவும் முடியவில்லை. நடந்தது பெரிய பிழைதான். அதுக்காக நான் வேதனைப்படுகிறேன்...... நான் உன்னை ஒரு போதும் மறக்கவில்லை ராதா. எப்பவும் நீதான் என்ட மனைவி. அந்த உணர்வு ஒரு பொழுதும் என்னை விட்டுப் போகாது.''

அவன் சிறு குழந்தைபோல விம்மிக்கொண்டு கூறினான். அவள் பாரம் மெல்ல மெல்லக் குறைந்து சென்றது....... நீண்ட நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் அவன் கண்களைத் துடைத்து விட்டு எழுந்தபோது கைகளைப் பட்டென்று பிடித்துக் கொண்டு கூறினாள்.

''நடந்ததை எல்லாம் மறந்திடுங்க. நானும் மறந்திடுறன்.''

— அவன் முகம் மலர்ந்து நின்றான்.

— ஓ! எவ்வளவு அன்பானவள் இவள்.

★ ★ ★

மறுநாள் காலை அவள் குளித்துவிட்டுப் புத்துணர்ச்சியுடன் வெளியே வந்தாள். ஒரு மாதகால நெஞ்சின் கனம் போன சுவடு தெரியாத களிப்பு அவளுக்கு.

அவன் இன்னும் நித்திரையிலிருந்து எழவில்லை. கையில் கோப்பிக் கோப்பையுடன் வந்தவள் அவன் அருகே அமர்ந்து மெல்லத் தட்டி எழுப்பினாள். அவன் உறங்கும் முகத்தை அப்படியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவள் — அவனை மோசமாகக் கொடுமைப் படுத்தி விட்டோமோ என்ற கழிவிரக்கமும் சேர பாசமுடனே அவன் தலைமயிரைக் கோதிவிட்டாள்.

அந்த சுகானுபவத்தோடு கண்விழித்த காந்தனில் ஏன் இந்தத் தடுமாற்றம்! ராதாவின் கூரிய பார்வையை எதிர் நோக்க முடியா மல் இனந்தெரியாத அச்சத்துடன் திடுக்கிட்டு அவன் தடுமாறியதை அவள் சரியாகவே எடை போட்டாள்.

— அவர் ஏன் என்னைக் கண்டு நடுங்க வேண்டும்......?.

அவள் தொடர்ந்து சந்தேகத்தை வளர்க்க முன்னதாகவே அவன் சாதுரியமாக — எதுவும் நடக்காததுபோல் சுதாகரித்துக் கொண்டு அவளை மெல்ல அணைத்தான். அந்த அணைப்பில் கூட அவன் விரல்கள் லேசாக நடுங்குவதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பித் தவித்தாள் அவள்.

மலைப்பாம்பு உடலை நெருடுவதுபோல அவன் அணைப்பு ஏன் இவ்வளவு அருவருப்பாக இருக்க வேண்டும்! மத்தளம் அடிக்கும் கரத்தினால் வீணையை மீட்டும் போது ஏற்படும் சகிக்க முடியாத அபசுரம் அவளை நிலைகுலையச் செய்யத் தடுமாறித் தத்தளித்தாள் அவள்.

காந்தன் பாடசாலைக்குப் போய்விட்டான். அவள் சிந்தனையி லாழ்ந்தாள். அவர் ஏன் என்னைக் கண்டு அஞ்சவேண்டும்!

— அந்தப் பார்வையில் இருந்தது பயப்பீதி மாத்திரமா!

— ஒரு மமதை – ஏளனம்!

கண்ணுக்குப் புலப்படாத இன்னொரு காந்தனை முதன் முதல் அவன் உடம்பிற்குள் ஊடுருவிப் பார்த்த அநுபவத்தை ஜீரணிக்க முடியாமல் ஒரே குழப்பம்... நீண்ட சிந்தனையின் பின் ஒரு முடிவிற்கு வந்தவளாக எழுந்து வெளியே சென்றாள்.

★ ★ ★

கற்பகத்தின் வீடு சிறியதாக இருந்தாலும் மிக நேர்த்தியாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது.

''கற்பகம் இருக்கிறாளா! நான் ராதா அக்கா வந்திருக்கி றேன் என்று சொல்லுங்க''

— கூறிவிட்டு அவள் கதிரையில் அமர்ந்த சற்று நேரத்திற் கெல்லாம் அந்த வீட்டில் மயான அமைதி நிலவியதை அவள் கண்டு கொண்டாள்.

விறுந்தையில் இருந்த சிறிய அலுமாரியில் புத்தகங்கள் ஒரே சீராக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. டீப்போவின் மேல் வாத்து போன்ற பூச்சாடியில் சிறிய பிளாஸ்டிக் மலர்க்கொத்தொன்று

ஆடம்பரமாக இருந்தது. சுவரில் சூரிய அஸ்தமனக் காட்சியொன்றின் சித்திரம் தொங்கியது. அந்த ஓவியம் கற்பகம் வரைந்ததாக இருக்க வேண்டும். கீழே கையெழுத்து எதையும் காணோம்.

நீண்ட அமைதிக்குப் பின்பு கற்பகம் கையில் தேநீர்க் குவளையுடன் வெளியே வந்தாள் மாணவி என்ற குறுகுறுப்பைத் தாண்டிய முதிர்ச்சி சோகமாக அவள் முகத்தில் அப்பியிருந்தது. தன்னையும் மீறிய ஆத்திரம் அவளில் ஏற்பட்டாலும், தன் கணவனால் வஞ்சிக்கப்பட்டவள் என்ற கழிவிரக்கத்துடன் சிநேகத்தை வலிந்து வரவழைத்துக் கொண்டு பேச்சைத் தொடங்கினாள் ராதா.

''கற்பகம்! நான் காந்தனுக்கு மனைவி என்று உனக்குத் தெரியும். நீ அவருக்கு மாணவி. ஒருவனுக்கு ஒருத்திதான் உரிமை பாராட்ட முடியும்''

— என்றவள், தான் பேசுவது புரியும் அளவுக்கு வாழ்க்கையைப் பற்றிய ஞானம் இவளுக்கு இருக்குமோ என்ற கலவரத்துடன் சிறிது நிதானித்து, மேலும் தொடர்ந்தாள்.

''நான் உன்னைக் குற்றம் சாட்டவில்லை. என்னைப் பொறுத்தவரை எனக்குள்ள ஜீவனுள்ள வாழ்வு இனி வராது. ஆனால் நான் அவரோட எபபடியும் வாழ வேண்டியவள். அதுக்கு முன் எனக்கு சில உண்மைகள் தெரிந்தாக வேணும். அதுக்காகத்தான் உன்னைப் பார்த்துப் பேச வந்தனான்.'' என்றவள் கற்பகத்தின் கண்ணுக்குள் உற்றுப் பார்த்துக் கொண்டு கேட்டாள்.

''அவரோட எனக்குள்ள உரிமையை மறுக்க உனக்கு எப்படி மனசு வந்தது. நீங்கரெண்டு பேரும் எனக்குத் துரோகஞ் செய்யிற அளவுக்கு நான் உங்களுக்கு என்ன தவறு செய்தனான். எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே! இந்தத்தவறு இனியும் நடக்காமல் தடுக்க நான் என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை.''

என்று மெதுவாக குமுறிக் குமுறி அழுத ராதா, மறுகணம் தன் தவிப்பை இவளுக்குக் கொட்டியிருக்க வேண்டாம், என்ற வெட்க உணர்வு பெற்றவளாக பட்டென்று கண்ணைத் துடைத்து விட்டு நிமிர்ந்தபோது கற்பகத்தின் கூரான பார்வை அவள் இதயத்தில் ஊடுருவிச் சென்றது.

— இவள் ஒன்றும் குழந்தையில்லை. இவளுக்கு முன் நான் அழுதிருக்கக் கூடாது என்ற வன்மத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தாள் ராதா.

''நான் உங்களுக்குத் துரோகம் நினைக்கவில்லை அக்கா''

— மேலே பேச முடியாமல் ஒரு கணம் தடுமாறித் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கூறினாள் கற்பகம்.

''எனக்கு அவரில அபிமானம் இருந்தது உண்மை. ஆனா உங்கட உரிமையைப் பறிக்கிற அளவுக்கு அது இல்லை. அவர் உங்கட புருஷன் என்ற நினைப்பு எனக்கு எப்பவும் இருந்தது. ஆனால், அவர்தான் அப்படியில்லை. என்னிடம் கெஞ்சினார். குடும்ப வாழ்க்கையில் தனக்கு மகிழ்ச்சி இல்லையென்று அழுதார். என்னிடம் மன்றாடினார். நான் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அவர் என்னை விடவில்லை. அவர் பிடிவாதத்திற்கும் அழுகைக்கும் முன்னால நான் என்னை இழந்திட்டன்... ''

— விக்கி விக்கிக் கற்பகம் கூறும் பொழுது நிலைகுலைந்து நின்றாள் ராதா.

— கற்பகம் அழுது கொண்டே கூறினாள்.

அவரைக் கல்யாணம் செய்யிற நோக்கம் எனக்குக் கொஞ்சமும் இல்லை, அக்கா ... ஆனால் அவர்தான் என்னைக் கைவிட மாட்டன் என்று இப்பவும் எழுதியிருக்கிறார். நான் அவரை உங்களுடன் வாழச் சொல்லித்தான் பதில் எழுதினனான். உங்கட வாழ்வைப் பறிக்கிற நோக்கம் எனக்குக் கொஞ்சமும் இல்லை.'' என்றவள் உள்ளே எழுந்து சென்று காந்தன் எழுதிய கடிதத்தைக் கொண்டு வந்து ராதாவிடம் நீட்டினாள்

கடிதத்தை முழுமையாகப் படித்து முடித்தபின் திருப்பிக் கற்பகத்திடமே கொடுத்தாள் ராதா. காந்தன் மண்புழுவாய் அவள் இதயத்தில் ஊர்ந்து கொண்டிருந்தான். காலையில் அவன் அணைத்த போது ஏற்பட்ட அந்த வீணையின் அபசுரகீதம் மீண்டும் அவள் இதயத்தை ஊடுருவி இரண்டாக அறுத்தது.

மெதுவாகக் கற்பகத்தின் கைகளைப் பற்றினாள். அவள் போட்ட பிச்சைக்கு நன்றி கூறும் பக்தி அந்தப் பற்றுதலில் இழையோடியது... கொஞ்ச நேரத்திற்கு முன் குழந்தை போல் தெரிந்த கற்பகம் பட்டென்று இமயமாய் வளர்ந்தது போல் அவள் முன் தோன்றினாள்.

''கற்பகம்! அவர் எனக்குள்ள உரிமையை உனக்கும் தந்திட்டார்''

— நீண்ட அமைதியின் பின் ராதா கூறினாள்.

''அவர் எனக்கு மாத்திரம் கணவனாக இருக்கவில்லை. உனக்கும் கணவன் என்ற அந்தஸ்தில்தான் இருந்திட்டார்.''

— கற்பகத்தைப் பாசமுடன் பார்த்துக் கொண்டே கூறினாள்.

''நான் அவரை உனக்கு விட்டுத் தந்ததாக நினைக்க வேண்டாம். ஏனென்றால் அந்த அளவுக்கு அவர் பெறுமதி யானவர் இல்லை. பெண்களின் இதயத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர் அவர். அவர் உனக்குப் பொருத்த மானவர் இல்லை. உனக்கு மட்டுமில்லை. இதயத்தை அர்ப் பணிக்கத் துடிக்கும் எந்தப் பெண்ணுக்குமே பொருத்த மானவர் இல்லை.''

— அவள் ஒவ்வொரு சொல்லாக அழுத்தமாகக் கூறிவிட்டு அமைதியானாள். அங்கிருந்து புறப்படுமுன் கற்பகத்தின் கைகளைப் பற்றிக் கொண்டு கூறினாள்.

''எனக்கு உன்னில ஒரு கோபமும் இல்லை கற்பகம். என் மனம் இப்பத்தான் ஒரு உறுதிக்கு வந்திருக்கு.''

★ ★ ★

இதயத்தின் சுமை ஒருகணம் குறைவது போலவும், பின் கூடுவது போலவும் அவள் பஸ் வரும்வரை தத்தளித்துக் கொண்டிருந்தாள். பின் ஏதோ ஒரு வன்மத்தில் அங்கிருக்கப் பிடிக்காமல் நடக்கத் தொடங்கினாள்.

'காந்தன்! எவ்வளவு ஆழமா என் இதயத்தை உங்களிட்ட ஒப்படைச்சன். அதைச் சுக்கு நூறாக்கிட்டீங்க.'

'எல்லாமே வஞ்சனை! நடிப்பு! எனக்கு முதுகில குத்திட்டீங்க.'

'நீங்க எனக்கு மாத்திரம் கணவனா நடிக்கல்ல. கற்பகத்திட்டயும் அப்படி நடந்திருக்கிறீங்க'

'இது ஒன்றும் தற்செயல் விபத்தில்லை. எல்லாமே திட்ட மிட்ட சதி. உங்க சுபாவமே இதுதான்.'

'நீ எத்தனை பெண்களோட மோகம் கொண்டு போயிருந் தாலும் உன்னை மன்னிச்சிருக்கலாம். ஆனால், எனக்கு மட்டும் சொந்தமான அந்த ஆந்த ஆத்மாவை – கணவன் என்ற உரிமையை இன்னொருத்திக்கு வழங்கினியே. அத மட்டும் என்னால மன்னிக்க ஏலாது'

கடற்கரைக்காற்று, குமைந்து கொண்டிருக்கும் அவள் இதயத்தை இதமாகத் தழுவிச் சென்றது. அந்தச் சொற்ப சுகானுபவத்திற்காக அப்படியே கடலை வெறித்துப் பார்த்துக்கொண்டு அங்கேயே நின்றாள்.

'இவ்வளவு நாளும் இப்படி ஒரு இதயமில்லா மனிதனோடு வாழ எனக்கு எப்படி முடிந்தது! இனியும் அவரோடு வாழ்ந்தால் அது உடல் இச்சைக்கு எனக்கு ஒரு ஆண் வேணும் என்ற தேவைக்கு மட்டுமானதாய்த்தான் இருக்கும்.

நன்றாக இருட்டும் வரை அங்கிருந்துவிட்டு எழுந்து சென்றாள் ராதா.

★ ★ ★

— பொங்கி வெடித்துப் போராட வேண்டிய விஷயமா இது. என் கொதிப்பைப் புரிந்து கொள்ள முடியாத உணர்ச்சியற்ற ஜடம்!

— இவனுடன் எனக்கென்ன வாதம்!

எண்ணும் போதே உள்ளத்தில் அருவருத்துக் குமட்டியது. அந்த உணர்வோடு அவனை அலட்சியமாய்ப் பார்க்கின்றாள். பாதி நாடகத்தில் வேடம் கலைந்துபோன அப்பாவிக் கதாநாயகனின் பரிதவிப்பில் அவன் கம்பீரமிழந்து கூனிக்குறுகித் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு அப்படியே இருக்கின்றான்.

அவன் முன்னால் கலங்குவதோ கடுகடுப்பதோ கூடாதென்ற வன்மத்தில் அவன் முன் நின்று சாதாரணமாகவே கூறுகிறாள்.

''காந்தன்! நான் போகிறேன். உன் ஆத்மாவை நீயே வைத்திரு''

அவன் பரிசளித்த அந்தப் பதக்கத்தைக் கைகளை இழுத்துப் பற்றி அதில் திணிக்கின்றாள். அந்தப் பதக்கம் கை நழுவிக் கீழே விழுந்தது. அதில் அவன் என்றும்போலச் சிரித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்ப்பதற்கு அவள் அங்கு இல்லை.

அவன் தலையைக் குனிந்தபடி அப்படியே இருந்தான்.

மறுநாள்!

'பிரிந்திருந்த கணவனோடு வாழப்போகிறேன்' என்று இரண்டு இனங்களுக்கு முன் சென்ற ராதா, பெட்டி படுக்கையுடன் மீண்

டும் ஏன் திரும்பி வருகிருள் என்று புரியாமல், அவர்கள் எல்லோரும் குழம்பிக் கொண்டு அப்படியே நின்ருர்கள்.

அவள் நிமிர்ந்த நடையுடன், நிதானமாக நின்றுவிட்டு, ஒவ்வொரு அடியாக வைத்து உள்ளே வருகிருள். எதுவும் நடவாதது போன்ற போலியான பாவனையை வலிந்து வரவழைத்துக்கொண்டு, ஆச்சரியத்துடன் தன்னை நோக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு வரட்டுப் புன்னகையைப் பதிலாகத் தருகிருள்.

— யாரும் எதுவும் பேசவில்லை.

தனது அறைக்குள் சென்றவள் பெட்டியை வைத்துவிட்டுக் கதிரையில் அமர்ந்தாள். எல்லோரும் விக்கித்து நின்ருர்கள். அவர்கள் என்ன கேட்கப் போகின்ருர்களென்பது அவளுக்குத் தெரியும். அதற்கான பதில்களை மட்டும் மீண்டும் மனதுக்குள் அசைபோட்டுக் கொண்டிருந்தாள்.

'புருஷனோட வாழறதுதான் பெண்ணுக்குப் பெருமை. ஆனல், என் பெண்மையைப் புரிந்து கொள்ள முடியாதவன் புருஷனுக இருப்பதில் எனக்கு ஒரு பெருமையும் வேண்டாம்'

'ஒரு பெண்ணுக்கு ஆண்துணை எதுக்கென்று இன்னும் புரியாதமாதிரி நடிக்கிறீங்களே! திருமணம் உள்ளத்தைப் பகிர்ந்து கொள்ளத்தான். எங்கட தமிழ்ச் சமூகம் இதை ஒத்துக் கொள்ளாதோ'

'அவர் என்னை அடிச்சு, முறிச்சுக் கொடுமைப்படுத்தினுலும் தாங்கியிருப்பன். ஆனுல், என் ஆத்மீக காதலை நெருச்சிக் கொன்னிட்டாரே'

'என்னில குறையிருந்தா அதை என்னிட்ட நேரிடையாச் சொல்லிட்டு அவர் ஆரோடயும் போயிருக்கலாம் ஏனென்ருல் நான் அவருக்குப் பரிசுத்தமான மனைவியாய் வாழுறவள். அந்த உண்மையில்லாமல் கள்ளனைப்போல் என்னை ஏமாத்திட்டு இன்னெரு பெண்ணையும் ஏமாத்திறவரோட வாழுறதுக்கு என்னுல முடியாது'

'புருஷன் என்ற மதிப்பில்லாமல் புழு மாதிரி உள்ளத்தில் நெளியிற அவரோட நான் எப்படி வாழுறது'

'நான் அவரை விட்டிட்டு இப்படியே வாழாவெட்டியா இருக்க மாட்டன். நான் ஒரு பிழையும் அவருக்குச் செய்யல்ல. நான் வாழவேண்டியவள். அவருக்கு முன்னுல வாழ்ந்து காட்டுவன்'

அவள் அவர்கள் கேள்விகளுக்காகக் காத்திருந்தாள். ஒரு உதை பந்தாட்ட வீரனுக்குரிய கம்பீரத்துடன் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு...... ஒவ்வொருவர் அசைவுகளையும் கூர்மையாக எடை போட்டுக்கொண்டு...... அவள் அப்படியே இருந்தாள்.

வாசலில் நின்றவர்கள் வழிவிட்டு ஒதுங்கி நின்றார்கள். அப்பா தோளில் கிடந்த துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அவர் களைத் தாண்டி உள்ளே வநதார் குழப்பம் நிறைந்த பரபரப்பை அடக்கிக்கொண்டு வந்தவர் நிதானமாக அவள் அருகில் அமர்ந்தார்.

அவரே கேட்கட்டும் என்று அவளும் பொறுமையாகக் காத்தி ருந்தாள். அவர் எதுவும் பேசாமல் கூரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர் பேசத் தயாராயில்லை என்பதைக் கண்டு கொண்டதும், நீண்ட மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அவளே கூறினாள்.

"அப்பா...... நளாயினி புருஷனைக் கூடையிலே சுமந்தாளே. ஆனால் இன்னொருத்தியும் அவள் புருஷனுக்கு மனைவியா இருந்திருந்தா அப்படிச் செய்திருப்பாளா? முடியாதப்பா. ஏனென்றால், அவள் புருஷன் மற்றப் பெண்களை விபச்சா ரியா நினைச்சுத்தான் உறவு கொண்டான். மனைவியா நினைச் சில்லை. அவள் புருஷனுக்கு நளாயினி ஒருத்திதான் மனைவி. என் புருஷன் எனக்கு அப்படியில்லையே......!......"

★ ★ ★

---

**வாழ்க்கை விசனகரமானது என்பது உண்மையல்ல அழு கையும் துயரமும் தவிர, அதில் வேறொன்றும் இல்லையென் பதும் உண்மையல்ல. மனிதன் அதில் எதையெல்லாம் தேடிக் கண்டு பிடிக்க விரும்புகிறானோ அவைகளெல்லாம் வாழ்க்கை யில் உள்ளன. வாழ்க்கையில் எது இல்லையோ எது குறை வாக உள்ளதோ அதனைச் சிருஷ்டித்துக் கொள்ளும் சக்தி, உருவாக்கிக் கொள்ளும் சக்தி, மனிதனிடம் உண்டு.**

**— மக்ஸிம் கோர்க்கி —**

---

● இரா. வேலுச்சாமி

# எங்கள் சந்தைகள்..

சந்தைக்குப் போன
மாடுகள்
பல் பிடித்து சுழி சுத்தம்
பார்த்துப்,
பணம் நிர்ணயிக்கப் படும் !

இந்தச் சந்தையில்
எங்கள்
நடைபார்த்து
சடை பார்த்து விலை
நிர்ப்பந்திக்கப்படும்...!

எப்பொருள்
யார் யார் கேட்டாலும்
அப்பொருள் விலையும்
அவரே தருதல் நியதி...

எங்கள்
சந்தையிலோ
எல்லாமே
ஏறுமாறு...!

எங்களைத்
தள்ளி விட
ஈன்றவர்களே
விலை தர வேண்டும்...!

விலைகள் —
தொகையாக
பணமாக
இல்லாமல்

கார்கள்—கல்நகைகள்
பங்களாக்கள் —
என்ற
பண்ட மாற்று முறையிலும்
நடப்பதுண்டு...!

இவை —
எங்கள் சந்தையில்
சரித்திரம் தொட்டுவரும்
சம்பிரதாயங்கள்...

சம்பிரதாயங்களைத்
தகர்த்தெறிய
இங்கே எவருக்கும்
சக்தியில்லை...!

காசு பணம்
மட்டும்
கழுதைகளும்
தர முடிந்தால் —

அவற்றுக்கும்
கண் நிறைந்த
கணவன்மார்
இடைக்கக் கூடும் !

நாங்கள்
இன்னும்
முக்காடு போடாத
கன்னியாஸ்திரிகள்

வெள்ளையுடை
மட்டும்
நாங்கள்
அணிந்திருந்தால்...

எங்கள் உள்ளார்ந்த
வெம்மைகளில்
அதுவும்
பழுப்பேறிப்போயிருக்கும்..!

நன்றி: குருக்ஷேத்திரம்

— கே. ஷிரானி

# கண்ணுபுரத்தின் மீது ஒரு கண்ணோட்டம்

இலங்கையின் வடபகுதிக் குடியேற்றக் கிராமங்களில் ஒன்றான கண்ணுபுரம் யாழ்ப்பாணத்தின் மேற்குப் பகுதியில் பண்ணைக் கடலுக்கருகாமையில் அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் கண்ணுப் பற்றைகள் நிறைந்து காணப்பட்டதனால் இக்கிராமத்திற்குக் கண்ணுபுரம் எனப் பெயர் வரக் காரணமாயிற்று. இக் கிராமத்தின் மொத்தப் பரப்பளவு ஏறக்குறைய 7000 சதுர அடியாகும். இதனுள் சேணியுள்ள வெளியான இடம் ஏறக்குறைய 1250 சதுர அடியாகும். இக் கிராமத்தில் குடியேறிய மக்கள் தொழிலை நோக்கமாகக் கொண்டு இங்கு குடியேறவில்லை. இருப்பதற்கு இடமில்லை என்ற ஒரேயொரு காரணத்தினால் நாட்டின் பல்வேறிடங்களிலிருந்து மக்கள் குடியேறியதனால் இக்கிராமம் உருவாகியது. 1970 ஆம் ஆண்டு காணிகளற்ற மக்களினால் உருவாக்கப்பட்ட இக்கிராமத்தின் வரலாறு பதினான்கு வருடங்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றது.

ஆரம்பகாலத்தில் கண்ணுப் பற்றைகள் நிறைந்த சதுப்பு நிலமாகக் காணப்பட்ட இப்பகுதியினை மக்கள் தங்களது அயராமுயற்சியினால் பற்றைகளை அழித்து, சதுப்பு நிலங்களுக்கு மண், குப்பைகளைக் கொட்டி மேடாக்கி, குடிசைகளை அமைத்து இங்கு குடியேறினார்கள். தொடக்கத்தில் பதினைந்து குடிகளைக் கொண்டிருந்த இக்கிராமத்தில், தொடர்ச்சியாகப் பல்வேறிடங்களிலிருந்து வந்து மக்கள் குடியேறியுள்ளனர். தற்பொழுது ஏறத்தாழ எண்பத்தைந்து குடும்பங்கள் உள்ளன

இவ்வாறு உருவான இக் கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையினை எடுத்து நோக்குகின்றபோது வறியவர்களாகவும், பல்வேறுபட்ட அடிப்படைப் பிரச்சினைகளை அநுபவிப்பவர்களாகவும், அடக்குமுறைக்கு உட்பட்டவர்களாகவும் உள்ளனர். இவர்கள் இக் கிராமத்தில் நிரந்தரத் தொழில் வாய்ப்பற்ற நிலையில் உள்ளனர். இதனால் வேலையில்லாப் பிரச்சினை இம்மக்களிடையேயுள்ள வறுமை நிலைக்குக் காரணமாகின்றது.

இங்கு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையுள்ளது. ஏனெனில் இப்பகுதிக் கடற்கரையோரமானது சதுப்பு நிலமாக இருப்பதுடன் விவசாயம் செய்வதற்கு உகந்ததாகவும் இல்லை. அருகில் கடல் வளம் இருந்த போதும், இவ்

வளத்தினை மக்கள் பயன்படுத்தாது உள்ளனர். இதற்குக் காரணம் இவர்களிடையேயுள்ளவரட்டுத்தன்மையான சாதிப்பின்னணியும் இத்தொழிலை மேற்கொள்ளக்கூடிய வசதியின்மையுமாகும். இவர்களில் 90%இற்கு மேற்பட்டோர் யாழ்ப்பாண நகரத்தில் கூலித்தொழில் செய்பவர்களாக உள்ளனர். ஆனால், கூலிவேலைகள் கூட தினமும் செய்ய முடியாத நிலையில் வேலையின்மையுள்ளது. அப்படிக் கிடைக்கும் கூலியினாலும் வாழ்க்கை நடத்தப் போதிய பணம் கிடைப்பதில்லை. நிரந்தரமற்ற கூலித்தொழில் செய்யும் இம்மக்கள் உடலுழைப்பை மாத்திரம் கொண்ட பாட்டாளிகளாக உள்ளனர். 90%இற்கு மேற்பட்ட குடும்பங்களின் சராசரி மாதவருமானம் 500 ரூபாவிற்குக் குறைவாகவேயுள்ளது. அரசாங்க ஊழியர்களாகக் கடமையாற்றுபவர்கள் கூட இம்மக்கள் மத்தியில் இல்லை. பெண்களைப் பொறுத்தவரையிலும் இந்நிலையேதான். இவர்களிற் சிலர் அருகிலுள்ள 'லேடன்' தொழிற்சாலையில் குறைந்த கூலிக்காக வேலை செய்கின்றனர்.

இத்தகைய வேலையில்லாப் பிரச்சினை மட்டுமன்றி கல்வி ரீதியான பிரச்சினையும் இவர்களிடையில் காணப்படுகின்றது. ஏறக்குறைய இக்கிராமத்தில் ஆரம்பக் கல்வி கற்றவர்கள் 20%மும் கல்வி பயின்று கொண்டிருப்பவர்கள் 17%மும் கற்காதவர்கள் 50%மும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் வரை கற்றவர்கள் 25 பேர்களும், உயர்தரம் வரை கற்றவர்கள் 4 பேர்களும் உள்ளனர். இதனை நோக்குகின்றபோது உயர்கல்வி நிலை இங்கில்லாதிருப்பதுடன் கற்காதவர்களின் வீதமும் அதிகமாகக் காணப்படுகிறது. சிறுவர்களின் கல்வி நிலையும் மிகவும் சீர்கேடாகவுள்ளது. இதற்கு இவர்களின் பொருளாதார வசதியின்மையே காரணமாகும். வறுமையின் காரணமாக பிள்ளைகள் தங்களது கல்வியைத் தொடர முடியாது வேலைக்குச் செல்ல வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்கள். பெண்களின் கல்வி நிலையானது ஆண்களை விட மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. பெண்களின் கல்வி அறிவு கையெழுத்திடுவதற்கு மாத்திரம் இருந்தால் போதுமென்ற வரட்டுத்தனமான பெண்ணடிமை மனோபாவத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இப்படியாக, இக்கிராமத்தின் கல்வி நிலையில் பிரச்சினைகள் காணப்பட்டபோதும் இவற்றிற்கான எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இங்கு சுகாதாரச் சீர்கேடு அதிகளவில் காணப்படுகிறது. இக்கிராமத்திற்கென ஒரு அரசாங்க வைத்தியசாலையோ அல்லது தனியார் மருத்துவமனையோ இல்லை. இவர்கள் நோயுற்றால் அந்தக் கிராமத்தினைவிட்டு யாழ்நகருக்கு வரவேண்டிய நிலையுள்ளது. சுகாதார சேவை நிலையங்கள்கூட இக் கிராமத்தில் சேவை செய்யாத காரணத்தினால் இங்கு பல நோய்கள் பரவுவதற்கான வாய்ப்

புக்கள் உள்ளன.

இத்தகைய பொருளாதார கல்விரீதியான பிரச்சினைகள்மட்டு மன்றி இம்மக்களிடையே சமூக ரீதியான குறைபாடுகளும் மிகவும் பாரதூரமான முறையில் வளர்ந்துள்ளன. சாதி வேறுபாடும், உயர்ந்தவன் – தாழ்ந்தவன் என்ற பேதமும் இங்கு காணக்கூடியதாகவுள்ளது இங்கு பெரும்பான்மையாக உயர்சாதியினரும், சிறுபான்மையாகத் தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்கின்றனர். ஆனல், உயர்சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கும் தன்மை அதிகளவில் இல்லாதிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் கண்ணபுரத்தினைச் சுற்றியுள்ள ஏனைய கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்படுபவர்கள் அதிகளவில் வாழ்வதாகும். இவர்களிலும் பல பிரிவினர் உள்ளனர். உயர்சாதியினருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படும்போது ஏனைய கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த உயர்சாதியினருடன் சண்டை செய்வார்கள். இதனல், உயர்சாதியினர் பயரீதியாக அடக்குமுறைகளைச் செய்வதில்லை இவ்வாறு இருந்தாலும் கூட இவர்களுக்கிடையில் மனேரீதியாக சாதிவேற்றுமை காணப்படுகிறது இதனல் இக்கிராமத்தில் எந்தவொரு செயலைச் செய்வதிலும் ஒற்றுமை இல்லாதிருக்கிறது.

இம்மக்களிடையே பிரதேசரீதியான வேறுபாடுகளும் நிலவுகின்றன இதற்கு அனைவரும் ஓரிடத்திலிருந்து குடியேருமல், நாட்டின் பல இடங்களிலுமிருந்து குடியேறியதும் காரணமாகும் இதனல் யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், வன்னியான், தீவான் என்று சண்டைகள் நடைபெறுவதுண்டு. இதுவும்கூட கிராமத்தில் ஒற்றுமையைப் பாதிக்கின்ற விடயமாகவுள்ளது.

இக்கிராமத்தில் பெண்கள் அடிமைத்தனத்திலே வளர்ந்து வருகிருர்கள். பெண்கள் சமுதாயத்தில் சமுதாய ரீதியாகவும், கருத்து ரீதியாகவும், கலை கலாச்சாரரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அடக்கப்பட்டுள்ளார்கள். இதனல் பெண்கள் சமுதாயத்தில் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே மதிக்கப்படுகிருர்கள். பெண்கள் ஆண்களின் அதிகாரத்தின் கீழேதான் வாழ முடியுமென்ற அடிமைத்தனத்தினுல் அவர்களின் சுதந்திரம் அடக்கப்படுகிறது. பெண்கள் கல்வி கற்கக் கூடாதென்ற மனேபாவத்தினுல், இவர்களின் சிந்தனை மழுங்கடிக்கப்படுகிறது. இதிலே குறிப்பாகப் பெண்களின் உயர் கல்வி பெரிதும் தடுக்கப்படுகிறது. இதற்கு மரபு ரீதியான கொள்கைகளையும், கருத்துக்களையும் முன்வைக்கின்றனர். வீட்டுவேலை செய்வதற்கும், குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும், கட்டிய கணவனுக்குச் சேவை செய்வதற்குந்தான் உகந்தவர்கள் என்ற மனப்பான்மை நிலவுகிறது. அத்

துடன் இவர்களுக்கு தாமே உழைக்கின்ற வசதிகளும் இல்லை. வேலை பார்க்கும் பெண்களுக்கும் கிடைக்கும் கூலி மிகக் குறைவாகவேயுள்ளது.

இங்கு சீதனப்பிரச்சினையும் பரவலாகக் காணப்படுகிறது. அன்றைக்கன்று உழைத்து வாழ்க்கையை நடாத்துபவர்களாக இருந்தும், இரு பக்கத்தினரும் (மணமகன், மணமகள்) வறியவர்களாக உள்ளபோதும், இளைஞர்களும், அவர்களது பெற்றோரும் சீதனமில்லாது திருமணஞ் செய்ய மறுக்கிறார்கள். இது பெண்களைப் பெற்ற பெற்றோர்களுக்குப் பெரிய பாதிப்பாகவுள்ளது.

மது அருந்தும் பழக்கத்தை ஆண்களிடம் அதிகமாகக்காணக் கூடியதாகவுள்ளது. குடும்பங்கள் எவ்வளவிற்கு வறுமையினால் வாடினாலும் இவர்கள் குடிப்பதை விட்டு விடுவதில்லை. இந்தக் குடிப் பழக்கமானது மனைவிமாரை அடித்துத் துன்புறுத்துவதோடு அயலவர்களுடன் சண்டை பிடிப்பதற்கும் காரணமாகிறது.

இங்கு வாழும் மக்கள் மதப்பற்றுள்ளவர்களாகவும், மதநம்பிக்கையில் ஊறியவர்களாகவும் உள்ளனர். இவர்களில் அநேகர் இந்து மதத்தினராவர். இவர்கள் சடங்கு முறைகளைக் கொண்டவர்களாகவும் மதம் சார்ந்த மரபுக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கின்றனர். வெவ்வேறு சாதியினர் வாழுவதனால் திருமணச் சடங்குகளும் வெவ்வேறு ஆலயங்களில் நடைபெறும். ஏனெனில் ஒவ்வொரு சாதியினருக்கும் தனித் தனியாகக் கோயில்கள் உண்டு.

இத்தகைய பொருளாதார, கல்வி, சமூக, கலாச்சார அடக்கு முறைகளையும், வறுமையினையும் அநுபவிக்கும் இக்கிராம மக்கள் அரச பேரினவாத அடக்கு முறைக்கும் உள்ளாகியுள்ளனர். திருகோணமலைப் பகுதியிலும், யாழ்ப்பாணத்தின் சில இடங்களிலுமிருந்து வந்து குடியேறியவர்களில் சிலர் அரச இராணுவத்தின் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களாகவுள்ளனர். இதனால், தமது வீடுவாசல்களையும், சொத்துக்களையும், வேலைகளையும் இழந்துவந்து குடியேறியுள்ளனர். அத்துடன் யாழ்நகரில் கூலித் தொழில் செய்பவர்களாக இருப்பதனால், அன்றாடம் நகரத்துக்குச் செல்ல வேண்டியவர்களாகவுள்ளனர். அரச பயங்கரவாதம் யாழ்நகரில் கட்டவிழ்த்து விடப்படும் நேரங்களில் இவர்கள் நிறையப் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் கூலித்தொழிலினாலேயே தமது வாழ்க்கையை நடாத்திச் செல்பவர்கள் பட்டினியால் வாட வேண்டிய சூழ்நிலையேற்படுகிறது.

இங்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகக் குறைவாகவேயுள்ளன. 1980ஆம் ஆண்டு இக்கிராமம் தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இதன்படி இவர்கள் இருந்த நிலப்பகுதியில் வீடுகள் அமைக்கவிருந்தனர். இதனால்

1982ஆம் ஆண்டு வீடுகள் அமைப்பதற்கு மக்கள் இருந்த நிலத்தினை எடுப்பதற்காக கடற்கரையோரத்தில் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு குடியமர்த்தும் பொழுது அரசாங்கம் ஆறுமாத காலத்திற்குள் அவர்களுக்குரிய வீடுகளைக் கட்டித்தருவதாக உறுதியளித்தது. இதன்கீழ் மொத்தம் எழுபத்தைந்து வீடுகளும் மலசல கூடங்களும் அமைக்கப்பட்டன. ஆனால் இவ்வீடுகள் இரண்டு வருடங்களின் பின்னர் தான் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட வீடு ஒவ்வொன்றிற்கும் அரசாங்கம் மாதாந்தம் நூறு ரூபா வீதம் வாடகை அறவிடுகிறது. அன்றாடம் பிழைப்புக்கே கஷ்டப்படும் மக்கள் வாடகை செலுத்த வசதியற்றோர்களாக இருக்கின்றனர்.

இந்த வீடுகளை வழங்குவதில் அரசாங்கம் காலதாமதம் செய்ததனால் முகாம்களில் வாழ்ந்த மக்கள் எல்லையற்ற துன்பத்தினை அநுபவித்துள்ளனர். மழைக்கும், வெயிலுக்கும் ஈடுகொடுக்க முடியாத கிடுகுகளினால் வேயப்பட்ட முகாம்களும், மலசலகூட வசதியின்மையும், தண்ணீர்ப் பிரச்சினையும், சுகாதார சீர்கேடுகளும் இவர்களது கஷ்டத்திற்குக் காரணமாக அமைந்திருந்தன. இன்றும் வீடுகள் வழங்கப்பட்ட மக்கள் தவிர ஏனையோர் குடில்களில்தான் வாழ்கின்றனர்.

அறுநூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இக்கிராமத்தில் சமூக அபிவிருத்தி முயற்சியாக நலன்புரிச்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இச் சங்கத்தினால் இக்கிராமத்தில் எத்தகைய சமூக அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. இச் சங்கம் சரியானபடி செயற்படாததற்கு சாதிப்பின்னணி ஒரு காரணமாகும் அத்துடன் அரசாங்க சேவையாளர்கள் கூட இக் கிராமத்தின் மீது அக்கறை செலுத்தாததன் காரணமாக சில குடும்பங்களுக்குக் கிடைக்க வேண்டிய உணவு முத்திரையும் இல்லை.

இவ்வாறான பலவேறுபட்ட பிரச்சினைகளில் மூழ்கித் துன்பங்களை அநுபவிக்கும் இந்த மக்களுக்கு, இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் மிகவும் சீர்கேடான வாழ்க்கை நிலைக்கு இவர்களை இட்டுச் செல்லும். அண்மையில் இப்பிரச்சினைகளில் அக்கறை கொண்ட, சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்கான ஸ்தாபனமான 'உயர்நிலை மாணவர் ஒன்றியம்' அக் கிராமத்திற்கு சிறுவர் பாடசாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன் இம்மக்களினால் சனசமூக நிலையம் ஒன்றும் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கே வாழும் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார ரீதியான பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் என்னவென்று ஆராயும்போது நிலப்பிரபுத்துவத்தின் ஆதிக்கமும், முதலாளித்துவத்தின்

சுரண்டல் தன்மையுமிருப்பதை அறியக் கூடியதாயிருந்தது. இதற்கு உதாரணமாக இன்றும் இக்கிராமத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், பக்கத்திலுள்ள செட்டியார் ஒருவரின் தென்னந்தோப்பில் அடிமைகளாக வேலை செய்வதைக் காணலாம்.

அரசியல் அடக்கு முறைக்கும், பொருளாதார, கல்விப் பிரச்சினைகளுக்கும், சமுதாயக் குறைபாடுகளான பிரதேச, சாதி வேறுபாட்டிற்கும், பெண்ணடிமைத்தனத்திற்கும் ஒரு அரசியல், பொருளாதார, சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலந்தான் தீர்த்து வைக்க முடியும். கண்ணுபுரம் மக்கள் மட்டுமல்ல, இலங்கையின் பலபிரதேசங்களில் வாழ்கின்ற மக்களும் இப்படியான அடக்குமுறைகளுக்குள் அமிழ்ந்துள்ளனர். இத்தகைய அடக்குமுறைகளை முற்று முழுதாகத் தீர்ப்பதற்கு மக்கள் புரட்சிதான் சரியான தீர்வாக இருக்கமுடியும்.

● ● ●

---

ஒரு நாட்டினுடைய கலாச்சார மட்டத்தை மிகச்சிறந்த வகையில் எடுத்துக் காட்டுவது அங்கே பெண்களுக்குத் தரப்பட்டிருக்கும் சட்ட பூர்வமான அந்தஸ்து தான்.

* * *

ஒரு செய்திப் பத்திரிகை ஒரு கூட்டுப் பிரசாரகன் மட்டுமல்ல, ஒரு கூட்டு கிளர்ச்சிக்காரன் மட்டும் அல்ல, ஒருகூட்டு அமைப்பாளருமாவான். —லெனின்—

* * *

பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்குமுறைதான் முதல் வர்க்க ஒடுக்கு முறையாகும். —ஏங்கல்ஸ்—

---

# தேசிய விடுதலைப் போராட்டமும் மகளிர் விடுதலையும்

யாத்ரா

இலங்கைத்தீவில் அரசியல் நெருக்கடியானது மிகவும் கூர்மையடைந்துவரும் இந்தக் கால கட்டத்திலே தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமும் அதில் மகளிரின் பங்களிப்பும் அதனூடாக அவர்களின் விடுதலையும் பற்றியதான சில கருத்துக்களை இங்கு சுட்டிக்காட்டுவது நல்லதாக இருக்கும் என நம்புகின்றேன்.

சர்வதேசரீதியில் ஏகாதிபத்தியத்தின் செயற்பாடு தன்னுடைய முடிவினைத் தள்ளிப்போடுவதற்காக சகலவகையிலும் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இந்நிலையில் நவகாலனித்துவ நாடுகளில் கூர்மையடைந்துவரும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் இன்று அரசியல் நெருக்கடியில் கூர்மையான வடிவங்களை எடுத்துள்ளன. மூன்றும் உலகநாடுகளில் பெரும்பாலானவை இன்னமும் அரைகுறை நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களின் பெரும்பகுதியினையும் முழுமையாகப் பூர்த்தியாக்கபடாத முதலாளித்துவ ஜனநாயகத்தினையும் கொண்டு அமையும்போது, இந்த நாடுகளின் அடிப்படைப் பொருளாதார அமைப்பானது நிலப்பிரபுத்துவ உறவுமுறைகளை விடாது ஜனநாயகத்தின் அமைப்புகளைப் பலமானதாக இல்லாமல் மேல் தோற்றத்தின் வடிவமாக மட்டும் கொண்டு அதற்கேயுரித்தான முறையில் ஒழுங்கு முறையில்லாத நிறுவன உறவுமுறைகளைக் கொண்டு அமைந்து விடும்போது பொருளாதார அடிப்படை நிலப்பிரபுக்கள், தேசிய முதலாளிகள், சர்வதேசிய முதலாளிகள், உயர் மட்ட அதிகாரக் குழுவினர் இவர்களுக்கானதாகக் கட்டியமைக்கப்பட்டு விடுகின்றது. இதனுடன் நவகாலனித்துவ நாடுகளில், இனங்களிடையிலான முரண்பாடு பேரினவாதத்தின் பொருளாதார அடக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்படும் இனத்தின் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டமாகஅமையும்போது, அதன் இயல்பின் ஓர் அம்சமாக ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு அமைந்துவிடுவதுடன், சோசலிசத்தை நோக்கியதான பாதையைத் தேர்ந்தெடுக்கும் வரலாற்றுப் போக்கைக்கொண்டு இருக்கின்றன.

இந்த "தேசிய விடுதலைப் போராட்டம்" பொருளாதார உறவுமுறைகளின் நெருக்கடியின்

விளைவாக சமூகமுரண்பாடு பிரதிபலித்ததுடன், இன்று அரசியல் ரீதியில் அதன் ஆட்சியைக் கைப்பற்றுதலுக்கான போராட்டமாக நடைபெறுகின்றது. இந்த அரசியல் போராட்டம். சமூக மாற்றத்திற்கான புதிய சமூக அமைப்பையும் புதிய பொருளாதார அமைப்பையும் ஏற்படுத்துவதற்காக அமையும்போது நாங்கள் சமூகப் பிரச்சினையின் தீராத ஒரு வடிவமாக இருக்கும் ''மகளிர் விடுதலை''யை நோக்குவோம்.

எந்தவகைச் சமூகப் பிரச்சினைகளும், பொருளாதார உறவு முறையில் பிரதிபலிப்புக்களைத் தெளிவாக இனங்கண்டு, அரசியல் போராட்டங்களின் மூலமே, மாற்றப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் ''மகளிர் விடுதலை''யும் அரசியல் போராட்ட வடிவம் எடுப்பது மிகமிக அவசியமாகும். அதாவது ''மகளிர் விடுதலை'' பற்றிய சமூகப் பிரச்சினைக்கு அரசியல் வடிவம் கொடுக்கவேண்டும். இவை போதிய வடிவமாக இல்லை. போராட்ட அணுகுமுறையினூடாக நிலைநிறுத்தப்படுகினறது.

மகளிர் விடுதலை என்றவுடன், மேற்சத்தைய மகளிரமைப்பு ஏற்படுத்தும் சீரழிந்த முதலாளித்துவத்தின் கருத்துருவடிவம் மாத்திரமல்ல. மார்புக்கச்சை அணிவதில்லை, ஆண்கள்போன்று ஆடை, தலைமுடி வெட்டுதல் போன்ற செயல்களும் அல்ல. அத்துடன் ஆண் வர்க்கத்துக்கு எதிரானது என்று கூறப்படுவதும் எந்தவகையிலும் நியாயமான காரணங்கள் இல்லை.

இங்கு நாங்கள் மகளிர் விடுதலையை மூன்றாம் உலகநாடுகளில், தேசியவிடுதலைப்போராட்டம் நடத்தும் நாடுகளின் இன்றைய நிலைமைகளைக் கவனத்தில் கொண்டே குறிப்பிடுவதுஅவசியமாகும் இந்த நாடுகளில் பெண் அடிமைத்தனம் முதலாளித்துவ நாடுகளின் அடிமைத்தனத்திலும் மாறுபட்டதுடன், பண்பாடு, கலாச்சாரம், மத வடிவங்களிலும். மிகவும் இறுக்கமானதும். நுணுக்கமானதுமாகும். பல்வேறு வகையில் ஊடுருவிப் பரவியதாகவும் உள்ளது. இதனை நாங்கள் பெரிதும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கையான போராட்ட வடிவங்கள் எவ்வாறு அரசியல் மயமாக்கப்பட்டு, சமூகத்தில் சுரண்டப்படும் அனைத்து மக்களின் நலன்களுக்குச் சார்பாகப் போராடுகின்றதோ இறுதியாக முதலாளித்துவத்திற்கு முடிவு கட்டப் போராடுகின்றதோ அந்த வகையிலான வடிவ முறையிலே தான்பெண்விடுதலையின் நிலைப்பாடும் போராட்ட வடிவங்களையே கொள்ள வேண்டியுள்ளது.

இன்று மகளிர் விடுதலைபற்றி மிகவும் அதிகமாக நடுத்தர வர்க்கத்தின் மகளிர்களினாலேயே பெரிதும் முன்வைக்கப்படுகின்றது இதனால்தான் பல்வகையான சீர்திருத்தக் கருத்துக்களும்

மகளிர் விடுதலைக்குள் இடம் பெற்றுவிடுகின்றது.

தமிழ்த்தேசிய இனத்தின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களை எடுப்பின் பெண் உழைப்பாளிகள், கூலியாள், விவசாயத்தில் இன்னமும் குறைந்த கூலியினையே பெறுகின்றார்கள். பொருளாதார வகையிலும் சுரண்டப்படுகிறார்கள். இவர்களின் நலன்களைக் கவனத்தில் எடுக்காமல் மகளிர் விடுதலைபற்றி அதிகம் பேசமுடியாது. (பெருந்தோட்ட மலையக பெண் உழைப்பாளிகளை தனியாக, மிகவும் ஆழமாக நோக்க வேண்டும் என்பதனால் அவர்களை இங்கு தவிர்த்துள்ளேன்.) இவர்களை அணிதிரட்டாமல், அதுவும் தனியான மகளிர் சங்கம் ஏற்படுத்திச் செய்யமுடியாது. விவசாய உழைப்பாளிகளின் அமைப்பு முறைகளில் கூடுதலான ஈடுபாட்டினை மகளிர் மேற்கொள்வதன்மூலமே சாத்தியமாகும்.

அலுவலகங்களில், வீடுகளில், சிறிய தொழிற்சாலைகளில் தொழில்புரியும் மகளிர்களையும் போராட்ட முறைகளில் ஈடுபடுத்துவதற்கான முறைகளைக் கையாளவேண்டும். இன்றைய நெருக்கடி நிலைமைகளில் இவர்களை ஈடுபடுத்தும் முயற்சி சாத்தியமாகவில்லையெனில், பின்னர் எப்போது சாத்தியமாகும்?

''பெண்விடுதலை'' என்பதன் கருத்துருவம்–சமூக பங்குபற்றியும் தலைமை தாங்கும் செயற்பாடுகளையும், மற்றவர்களைப் புரிந்துகொள்ளும் நிலைமைக்கும் அரசியல் நிலைமைகளை மதிப்பீடு செய்யவும் வழிவகுக்கும்.

இதனைவிட, போராட்டங்களில் நேரடியாக முகங்கொடுக்க இருக்கும் இளந்தலைமுறைகள் மகளிர்களை அணிதிரட்டுவதும் அவசியமாகும். 'பல்கலைக்கழகங்கள் வெறும் பட்டப் படிப்பிற்கு மாத்திரமல்ல. சமூக மாற்றத்திற்கான புதிய வாய்ப்புகளைத் தயாரிக்கும் ஊதுஉலையாகவும் இருக்கவேண்டும். பல்கலைக்கழக மகளிர்களின் பங்கு அதிகளவு சமூகத்திற்கும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் பயன்பட வேண்டும். ''மகளிர் விடுதலை', கருத்து ரீதியில் ஏனைய பிற்போக்குக் கருத்துக்களிலிருந்து விடுபட இவர்கள்தான் செயற்படவேண்டும். கருத்தரங்கு, விவாதம், கண்காட்சிகளுடன் அனைத்து மாணவர்களின் போராட்டங்களினூடாக இவர்களின் பங்களிப்பு முன்னின்று உழைப்பதன் மூலம் அதன் அர்த்தம் மிகவும் நன்றாகத் தெளிவுபடுத்தப்படும். கடந்த காலங்களிலும் யாழ் - பல்கலைக்கழகத்தின் போராட்டங்களில் மகளிர்பங்கு கணிசமாகஇருந்ததுகுறிப்பிடத்தக்கது.

தேசிய விடுதலைப் போராட்டம் குறிப்பிட்ட ஒரு வடிவத்தில் மாத்திரம் நடத்தப்படுவதில்லை. இது பல்வேறு வடிவங்களையும், வழிமுறைகளையும் காலம், வாய்ப்பு, எதிர்த்தரப்பு நிலை, முரண்பாடுகளின்கூர்மை, பலம், பலவீனம் போன்ற பல்வேறு

நிலைப்பாடுகளின் மூலம் உருப் பெறுகின்றது. இது மக்கள் அமைப்பு, வெகுஜனமட்டம் என் பதனையே ஆதாரமாகக்கொண் டது. எதிரி ஆயுதந்தாங்கி விடு தலையை அழிப்பதால்தான் தேசிய விடுதலைப் போராட்ட வடிவங்களினூடாக ஆயுதம் ஏந் துவது தவிர்க்கமுடியாமலுள் ளது. இந்நிலைமைகளையும் மக ளிர் விடுதலைக்காகப் போராடும் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது.

மகளிர் விடுதலைக்கான போராட் டமும்சரி, தேசிய விடுதலைப் போராட்டமும்சரி முழுமையான சமூக மாற்றத்திற்காக புதிய தோர் சமூக அமைப்பினை நிலைநி றுத்தப் போராடும்போது மீண் டும் அந்த இடத்தில் முதலாளித் துவ, குட்டி முதலாளித்துவப் போக்குகளுக்கு இடம் கொடுக்கப் படுமேயாயின் இங்குநடந்ததுசமூக மாற்றம் அல்ல—சமூகச் சீர்திருத் தமே. சமவுடமை அமைப்பு தோன்றுவது வர்க்க முரண்பாடு களைத் தீர்க்கவேயாகும். இதனுல் தான் தேசிய விடுதலைப் போராட் டம்வெறுமனே தனிநாடு அமைக் சப்படுவதற்கு மாத்திரமல்ல, பெண்ணுக்குவிடுதலையையும்நாட் டையும், உலகினையும், வர்க்க அமைப்பினைத் துடைத்தெறியும் பணியை மேற்கொள்ளும் வர்க்கப் போராட்டத்தையும் செய்ய வேண்டியுள்ளது. இது மகளிர் விடுதலைக்காகப் போராடும் சக்தி களுக்கும் பொருந்தும். தனி யொரு குறைபாட்டிற்காக அல்ல; குறைபாடுகளை இல்லாமல் செய் யும் காரணங்களுக்கே விடுதலை என்பதாகஅமையும்.

---

மறைந்த
பாரதப் பிரதமர்
திருமதி. இந்திராகாந்தி அவர்களுக்கு
எமது -

**இதய அஞ்சலிகள்....**

---

# ★ பகற்கனவு ★

**கண. மகேஸ்வரன்**

கங்கை கொண்டு
கடாரம் வென்ற
புளித்துப் போன
பழங்கதை எமக்குத்
தேவையே யில்லை!

இனிவருங் கதைகள்
இப்படியாகா;
குருதிக் கங்கைகள்
பெருகா வண்ணம்
புதுக்கதை வேண்டும்!

வைரத்தை வைரமே
அறுக்குமென்றால்,
வைரம் தோய்ந்த
நெஞ்சங்கள் கோடி
பெருகிட வேண்டும்!

தாயுஞ் சேயும்
ஒன்றேயெனினும்
வாயும் வயிறும் வேறுமுண்மை
நெஞ்சிலோடித்
தைத்திட வேண்டும்!

சாதியும் மதமும்
சமூக விகற்பங்கள்;
நீதியின்வழியை நிமிர்ந்து கேட்க
தாய்மொழி மாந்தர்
சேர்ந்திட வேண்டும்!

ஒன்றை முற்றாகப்
பெற்றாக வேண்டுமேல்,
ஒன்றை நிச்சயம்
இழந்தாக வேண்டும்;
இன்றையகதை இதுவேயாகும்!

மானிட நேயம்
தானாய் வராது;
தானாய் வருமேல்
தரித்திரம் வராது;
இங்கு நடப்பது...?

போதி மாதவனின்
போதனைகள் பொய்யில்லை;
போதிப்பவற்கே புத்தி
பேதலித்துப் போயிற்று!
ஆதலால் இங்கே...?

அன்பும் அஹிம்சையும்
அழிந்து பலநாட்கள்;
அக்கினிக் குண்டத்தில்
ஆணவச் சுவாலைகள்;
இப்படியே இன்னும்—

இழுபறி தொடருமேல்,
இனவெறி மேலும்
எழுந்து நின்றார்க்கும்;
ஒற்றுமை இனிமேல்
கனவில் மட்டுமே!

---

நீ கூறப்போகும் வார்த்தை மௌனத்தை விடச் சிறந்தது என்று திட்டவட்டமாகத் தெரியும்வரை வாயைத் திறக்காதே!

— மக்ஸிம் கோர்க்கி —

---

# அர்த்தமுள்ள காதல் வாழ்க்கை

திருமணம் முடிந்த 19 தினங்களுக்குள் காதலனைப் பொலிஸ் பிடித்துக் கொண்டு செல்கிறது. இளம் காதலியின் முன்பாக சித்திரவதை நடக்கிறது. இறுதியாக, காதலன் மரண தண்டனை பெற்று உயிர் துறக்கிறான். காதலியும் தன் காதலன் அடிச்சுவட்டில் நாட்டிற்காகப் போராடும் பணியில் பெண்களைத்திரட்ட தன்னையே அர்ப்பணித்துக் கொள்கிறாள்.

பணக்கார அழகியை, அவள் வீட்டுக்கு கார் டிரைவரோ, அல்லது சமையற்காரனோ காதலிப்பது — பரந்த பச்சைப்புல்வெளியில் 'மேட்ச்'சான வெள்ளுடையில் கைகோர்த்து 'ஸ்லோமோஷனில்' ஓடிவருவது— உச்சக்கட்டக்காட்சியில், புரட்சிகரமாய் ஊரைவிட்டு ஓடிப்போய்விடுவது; இல்லையேல் ஜோடியாய் விஷம் குடித்துச் செத்துப்போய் ரசிக சிகாமணிகளை உருக்கிவிடுவது— இவைகளை இலட்சியக் காதலாய் சொல்லப்பட்டு வருகிற நமக்கு, இது ஏதோ கற்பனைக் கதை என்று நினைக்க வைக்கும். இது கற்பனை அல்ல; நடந்த வரலாறு!

பாக்கியராஜ் படத்தைப் பார்த்துக் கொண்டும், வாராந்திரக் இலக்கியக்கடலில் மூழ்கி முத்தெடுத்தும், ஜிகினாக் கனவுகளில் 'வாழ்ந்து' கொண்டிருக்கிற பெண்களுக்கும், பிறப்பெடுத்திருப்பதே ஏதாவதொரு பெண்ணைக் காதலிப்பதற்குத்தான் என்ற தேடலில் ஈடுபட்டிருக்கும் ஆண் சிங்கங்களுக்கும், புரட்சியை நேசிப்பவர்களால் காதலை எழுத்துக் கூட்டிக் கூடப் படிக்கத் தெரியாது; குடும்ப உறவுகளில் எந்திரத்தனமாக நடந்து கொள்வார்களென்று கொச்சையாய்ப் புரிந்து கொண்டவர்களுக்கும் இவர்கள் வாழ்ந்து காட்டிய விதம், காதல் வாழ்க்கை குறித்த சரியான அர்த்தத்தைக் கற்றுத் தருகிறது.

பகலிலே மின்சாரக் கம்பனியொன்றின்தொழிலாளியாகவும், இரவெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களைக்கருவறுக்கும் கொரில்லாப்படை வீரனாகவும், எப்போதும் தன்னை இதய சுத்தமாய் நேசிக்கிற ப்ரிய காதலனாகவும் திகழ்ந்த நகூயென் வான் ட்ராயை, பான் திகுயென் நினைவு கூர்கிறார்.

திருமணம் செய்வதற்கு முன்பு அவர் என்மீது அளவற்ற காதல் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் நான் வேலையை முடித்துக் கொண்டு வெளியே வரும் போதும் எனக்காக அவர் காத்துக்கொண்டிருப்பார்— மழையாக இருந்தாலும் சரி, வெயிலாக இருந்தாலும் சரி. இப்படித்தான் ஒருமுறை அவருடைய சொந்தக் கிராமத்திற்குச் சென்று இரண்டு வாரங்கள் இருக்க வேண்டி வந்துவிட்டது. அந்த நாட்களில் எனக்கு இரண்டு மிக நீண்ட கடிதங்களை எழுதியிருக்கிறார். அதில் நாங்களிருவரும் பல வருடங்களாகப் பிரிந்து விட்டதைப் போன்ற உணர்வையே வடித்துத் தந்திருந்தார்.

1964 ஆம் வருஷம் புதுவருட தினத்தன்று நமக்குக் கல்யாணம். அன்றுமோதிரம் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தபோது மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் போனார். ஏதோ மிகவும் புனிதமான ஒரு பொருளை அடைந்து விட்டதைப் போல் பெருமிதப் பட்டார். மோதிரத்தை விரலில் மாட்டிக்கொண்டு, "இந்த மோதிரம் ஒருவேளை, வேலை செய்யும் போது என் விரல் துண்டிக்கப்பட்டுப் போனால்தான் என் கையை விட்டுப் போகும்" என்று குரல் கம்மக் கூறினார்.

எனக்கென்று சொந்தமான அவருடைய காதல் ஆழமானது, உண்மையானது என்பதோடு பெருந்தன்மை வாய்ந்தாகவும், நாகரீகமானதாகவும், பெருமைப் படத்தக்கதாகவும் இருந்தது. அவர் என்னை முகஸ்துதி பாடினதில்லை. ஒரு சின்னஞ்சிறிய தவறைக்கூட அலட்சியமாக விட்டுவிடமாட்டார். சில சமயங்களில் நான் கோபமடைந்துவிடுவேன். அப்போது அவர் மிகவும் இதமாக, "நீ மிகச்சிறந்த பெண்ணாக மாறவேண்டுமென்றே விரும்புகிறேன். நாம் ஒருவரையொருவர் எவ்வளவு காதலிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் மிகச்சிறந்த மனிதர்களாக மாற ஒருவருக்கொருவர் உதவ வேண்டும்" என்று கூறுவார்.

ஃ ஃ ஃ

அன்று காலை ஒன்பது மணி போல எட்டுப் பொலீஸ்காரர்கள் என்வீட்டிற்குள் நுழைந்தார்கள். அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடிக்கு ட்ராயை விலங்கிட்டுக் கரகரவென்று இழுத்துக் கொண்டு வந்தார்கள். முகமெல்லாம் ரத்தக்காயங்களும், சிராய்ப்புகளுமாக உருமாறிப் போயிருந்தது. தலையெல்லாம் அலங்கோலமாகப் பிய்த்தெறியப்பட்டிருந்தது. பொலீஸ்காரர்கள் மிருகத்தனமாகத் தள்ளிவிட்டு, படுக்கையில் உட்காரும்படி செய்தார்கள்.

அந்தக் கொமாண்டர் என்னைப் பார்த்தவுடன், ராயை நோக்கி, "இளம் மனைவி! நீ மிகவும் சந்தோஷமாக இருக்க வேண்டியவன். இதைவிட உனக்கு என்ன வேண்டியிருக்கிறது?" என்றான்.

நெற்றியில் விழுந்ததலைமுடியை மேலே தள்ள, தலையைப் பலமாக

ஆட்டிக் கொண்டே, ட்ராய், ''நேற்றிரவே பலமுறை சொல்லி விட்டேன். மீண்டும் சொல்கி றேன். அமெரிக்க வெறியர்களைத் துடைத்தெறிவதுதான் நான் விரும்புவது. தென் விட்யனும் முழுச் சுதந்திரம் பெறவேண்டும்; போதுமா?'' என்றார்.

''வீட்டிலே தங்கிச்சுகத்தை அனு பவித்துத் திருப்தியடையவில்லைப் போலும்! இன்னும் சீக்கிரத்தில் சரியான உதை வாங்கப் போகி றாய்'' என்றான்.

அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்து முகத்தில் அறைகிற மாதிரி ட்ராய் பதில் சொன்னார். ''உன்னைப் போன்றவனல்ல நான்! என்னுடைய மக்களைக் கொன்றுகுவிப்பதற்கு, அமெரிக்க வெறியர்கள் குண்டுகளையும், துப் பாக்கிகளையும் கொண்டு வரும் போது என் தலையை வளைத்துக் கொண்டு சுகபோகமாக வாழ ஒருகாலும் முயற்சிக்கமாட் டேன்.''

ட்ராய் நீண்டநேரம் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தார். அவருடைய கண்களில் அன்பும், பாசமும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. என்னிடம் ஏதோ பேச விரும்புவதையும், என்னை அமைதிப்படுத்தத் துடிப் பதையும் அந்தப் பார்வை எனக் குத் தெளிவாக உணர்த்தியது. அவருடைய ஆழமான அன்பை, நேசத்தை உணர, உணர அவ் வளவுக்கவ்வளவு என் நெஞ்சில் சோகச்சுமை நிரம்பியது. அவரை முன்னதாகவே உணர்ந்து கொள்ள முடியாமற் போனதற் காக என்னையே நான் நொந்து கொண்டேன். புனிதமிகுந்த இந் தப் புரட்சிக்காகவே தனது சொந் தச் சுகங்களையெல்லாம் துச்ச மென மதித்திருக்கிறார். எங்கள் திருமணத்தை ஏன் ஒத்திப் போட் டுக் கொண்டு வந்தார் என்பதை இப்போது என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

பொலீஸ்காரர்கள் வெடிகுண்டு களைக் கண்டுபிடிக்க எல்லா இடத்தையும் சோதனையிட்டார் கள். ''உண்மையைச் சொல்ல வில்லையென்றால், உன் கணவனை இதே அறையிலேயே சாகும்வரை அடித்து நொறுக்கி விடுவேன்'' என்று மிரட்டினார்கள். ''வெடி குண்டுகள் எங்கேயிருக்கின்றன?'' என்று கேட்டு ட்ராயை மாறி மாறி அடித்தார்கள். பிறகு மின் சாரத்தினால் 'ஷொக்' அடிக்க விட்டார்கள். அவர் படுக்கையில் துடித்துத் துடித்து விழுந்தார். அதற்கு மேலும் என்னால் உட் கார்ந்திருக்க முடியவில்லை. என் இதயத்திலிருந்த கொஞ்ச நஞ்சப் பயமும் ஓடிவிட்டது. அந்தப் பொலீஸ் கும்பலிடையே ஓடி அவர்களைத் தடுக்க முயன்றேன். ஒருமுரடன் என் இரு தோள்க ளையும் பிடித்து அழுத்தி உட்கார வைத்தான். நான் கூச்சல்போடத் தொடங்கினேன். அவர்களோ, தங்கள் துப்பாக்கிச் சனியனை எனக்கு நேராக நீட்டிக் கொண் டார்கள். சித்திரவதையைநிறுத்தி மீண்டும் கேட்டார்கள், ''வெடி குண்டுகள் எங்கேஇருக்கின்றன.''

ட்ராய் வேதனையோடு, ஆனால் உரத்த குரலில், ''இன்னும் அதையே கேட்டால்...? எங்கெல்லாம் அமெரிக்க வெறியர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் வெடிகுண்டுகள் இருக்கின்றன... போங்கள்!'' என்றார். இந்தமுறை கொமாண்டர் தானே அடிக்கத் தொடங்கினான். பொலீஸிடமிருந்துஒருகைத்தடியைப்பறித்து, சரமாரியாக மழைபோல் விளாசித் தள்ளினான். ஒவ்வொரு முறையும் அடித்து விட்டு அதே கேள்வியைக் கேட்டார்கள். ஒரு வார்த்தையைக் கூட ட்ராயிடமிருந்து பெற முடியவில்லை.

அவருடைய சட்டை கந்தலாகக் கிழிந்து தொங்கியது. முகம், நெஞ்சு எல்லாப் பகுதியிலும் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வாயிலை நோக்கி மெல்ல அடி எடுத்து வைத்துக் கொண்டே என்னையே தீர்க்கமாகப் பார்த்து, முகத்தில் புன்னகை வரவழைக்க முயன்றார். என் கணவரின் அருகில் செல்லப் போராடிப் பார்த்தேன். முரடர்கள் என்கழுத்தைப் பிடித்துக் கொண்டிருந்த போதிலும் உரக்கச் சத்தம் போட்டு, ''ட்ராய்! உங்களை அளவு கடந்து நேசிக்கிறேன். உங்களை என்றும் காதலிக்கிறேன்'' என்று கூவினேன்.

கணவனுடன் கசப்பையும், இனிப்பையும் பகிர்ந்துண்டு, விசுவாசத்தோடு இறுதிவரைவாழ்ந்த மனைவியரின் வீரமிக்க கதைகளைக் கேட்பதையே அதிகம் விரும்பினேன். பாவம் ட்ராய்! வீட்டிற்குத் தாமதமாக வரும் போதெல்லாம் என்னுடைய பெற்றோர் வீட்டுக்குப் போய் என் கடைசித் தங்கையைத் தூக்கிக் கொண்டு வருவார். அப்போதுதான் நான் ஏதும் தவறாக எண்ணிக் கொள்ள மாட்டேனாம். திருமணத்திற்கு முன்பும், பின்பும் ட்ராய் எவ்வாறு தனது சக்தியையும், மனத்தையும் இவ்வளவு பெரிய கஷ்டம் நிறைந்த வேளையில்ஒருமித்து ஈடுபடுத்திக் கொண்டே, என் மனத்தை மகிழ்ச்சிப்படுத்தஅவர் எடுத்துக் கொண்ட அக்கறையையும் எண்ணியெண்ணி வியந்து கொண்டிருந்தேன்.

மற்றவர்கள் கணவன்மூலமோ, மனைவி மூலமோ தங்களது புரட்சி நடவடிக்கைக்கு உதவி பெற்றார்கள். ஆனால் நானோ, குறைந்த பட்ச உதவியைக் கூடச் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, பல சமயங்களில் அவருடைய வழியில் இடைஞ்சலாக இருந்திருக்கிறேனே! கடைசியில் சிறைச்சாலையில் அவரைச் சந்தித்தபோது சொன்னார், ''நமது திருமணம் முடிந்ததிலிருந்து நான் வாக்குறுதி கொடுத்திருந்ததைப் போல, உன்னை வெளியேஅழைத்துச் செல்ல முடியாமல் போய் விட்டது. உன்னை முறையாக நடத்தவில்லையென்பது தெரியும். திருமணம் முடிந்த பின்னரும்கூட ஒவ்வொரு மாலையும் வெளியே சென்று விட்டு வெகுநேரம் கழித்துத்தான் வீடு திரும்பியிருக்கிறேன். நீ எப்போதாவது சிணுங்கினால், தலைக்கு மேலே வேலை

இருக்கிறது என்று மறுத்து விடுவேன். வேறு எந்தப் பெண்ணாலும் இத்தனை விசுவாசமாக இருந்திருக்க முடியாது.''

ட்ராய் வார்த்தைகளை அளந்து பேசினார். ''எனக்கு 'அந்த' முடிவு நடந்து விட்டால் நமது நண்பர்களோடு சேர்ந்து நீயும் தொடர்வாய் என நம்புகிறேன்.'' அவர் தனது கைக்குட்டையை உருவி என் கண்ணீரைத் துடைத்தார்.

''உன்னைத் தனிமையில் என் தோழர்கள் விட்டுவிட மாட்டார்கள். சிறையில் இருக்கும்போது நீயே பார்த்திருப்பாயே! தெருக்களில் மக்களைச் சந்திக்கிறாய். அவர்களுடைய உதாரணங்களை நீ பின்பற்ற வேண்டும். நீயும் சில புரட்சி வேலைகளைச் செய்ய வேண்டும். அது, துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்வதாய் இருந்தாலும் சரி! அல்லது, செய்திகளைப் பரப்புவதாக இருந்தாலும் சரி!'' பிறகு நண்பகர்ளைப் பற்றியும் விசாரித்தார்.

''நமது உறவினர்களைச் சந்திக்கும்போது எனக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள். அவர்கள் நமது திருமணத்திற்கு வந்திருந்தார்கள். ஆனால், நான்தான் அவர்கள் வீட்டுக்குப் போகமுடியவில்லை. அம்மா மிகவும் கவலைப் படுவார்கள் இல்லையா?''

நான் கடைசியில் அந்தக் கேள்வியையும் கேட்டே விட்டேன். ''உங்களை மீண்டும் பார்க்க முடியுமா?'' தன் இருகைகளாலும் என்னை அணைத்துமுத்தமிட்டார். அவருடைய கன்னம் என் கண்ணீரில் நனைந்தது.

''நாம் மீண்டும் சந்திப்போம். அதை மட்டும் நம்பு'' என்றார். அவருடைய தோளை என் கைகள் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டிருந்தன. என் தலையை விலக்கி மெதுவாக என் கூந்தலை வருடினார். ''உன்னுடைய சிறைத் தோழிகளைப்போல வாழ முயற்சி செய். கஷ்டத்தை ஏற்றுக் கொள்ளப் படித்துக் கொள்.''

●

என்னுடைய கணவரின் கல்லறைக்குச் செல்வது எட்டு அல்லது ஒன்பதாவதுதடவை எனநினைக்கிறேன். மலர்வளையம் வைத்து, கற்பூரம் கொளுத்திவிட்டு நீண்டநேரம் அமைதியாக நின்றுகொண்டிருந்தேன். பொலீஸின் தீவிர கண்காணிப்பால் நகரத்தில் புரட்சி இயக்கத்தில் பங்கு கொள்வது கடினமானதாய் இருந்தது. இறுதியில் நான் தீர்மானித்தேன். மறு நாள் விடுவிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று என் கணவருக்காக பழிக்குப் பழி வாங்கும் வகையில் எந்த வேலையையும் செய்ய வேண்டியது.

பிறகு, எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். ''ட்ராய்! நீ வாழ்ந்த விதமே நான் வாழ்வேன்! உன் அடிச்சுவட்டில் நானும் இறுதிவரை போராடுவேன். இது உறுதி.''

# மாதர்தமை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!

— குறிஞ்சி —

"பெண்களே இல்லாதிருந்தால் மனிதர்கள்
தெய்வங்கள் போல் வாழ்ந்திருக்கக் கூடும்." — டெக்கர் —

இவ்வாறான அறிஞர்களின் கருத்துக்களை நாம் எடுத்த எடுப்பில் அங்கீகரித்து விட முடியாது. எமது சிந்தனைக்கும் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த மேற்கோளின்படி பெண்களை மனிதர் என்ற நிலையிலிருந்து வேறுபடுத்தியுள்ளதாகத் தொனிக்கிறது. அப்படியாயின், பெண்கள் என்ன மனித இனத்திலிருந்து வேறுபட்ட தனி இனமா? பெண்களை மனித இனத்திலிருந்து தள்ளி அவர்களால் வாழ்வில் தீங்குதான் ஏற்படுகிறது என்பதுபோல் காட்டுவது ஆணாதிக்கத் தன்மையின் வக்கிரமான வெளிப்பாடாகும். பெண்களே இல்லாதிருந்தால் மனித இனத்தின் தோற்றமே இல்லை என்பது உண்மை. இந்நிலையில் மனிதர்களின் வாழ்க்கையைப்பற்றிச் சிந்திப்பது விந்தைதான். மனித வாழ்க்கையில் ஆண், பெண் இருவருமே அங்கம் வகிக்கின்றனர். இதில் பெண்கள் இல்லாது ஆண்கள் மட்டுமோ, ஆண்கள் இல்லாது பெண்கள் மட்டுமோ நல்லபடியாக வாழ்ந்து விடலாமென்று எப்படிக் கூறமுடியும்? இந்த வகையில், மேற்காட்டப்பட்ட மேற்கோளும் பெண்களை இழிவுபடுத்துகின்ற ஒரே நோக்கோடு கூறப்பட்ட வெறும் அர்த்தமற்ற கருத்தாகவே காணப்படுகிறது.

**பெண்ணின் காதல் என்பது நீர்மேல் எழுதிய சாஸனம்! பெண்ணின் விசுவாசம் என்பதோ மணல்மீது வரைந்த சித்திரம்.**

— ஐடெலின் —

இதில் நீர்மேல் எழுதிய சாஸனம் போன்ற காதலும் இருக்கலாம்; மணல் மீது வரைந்த சித்திரம் போன்ற விசுவாசமும் இருக்கலாம். ஆனால், இவை இரண்டும் தனித்துப் பெண் இனத்திற்கு மட்டும் சொந்தமானவை அல்ல. இதுபோன்ற தன்மை ஆண்களிடமும் இருக்கலாம்.

---

இப்பகுதி தொடர்ச்சியாய் வெளிவரவிருக்கிறது. பெண்களைப்பற்றி நீங்கள் அறிந்த பழமொழிகளை விளக்கங்களுடன் அனுப்புங்கள்.

இவ்வாறான பழமொழிகளை ஒரு குறுகிய வட்டத்துக்குள் நின்று அவர்கள் முன்வைத்ததாகவே எம்மால் அறியக்கூடியதாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்பட்டசில அநுபவங்களைக்கொண்டோ தாம் பழக நேர்ந்த சில பெண்களின் தன்மையினைக் கொண்டோ முழுப் பெண் இனத்தைப்பற்றிய பொதுவான முடிவிற்கு வருதல் தவறாகும். பெண்களுக்கிருக்கின்ற இப்படியான ஒரு பக்க சார்புள்ள இழிவான கருத்துக்களை — சமுதாயத் தளைகளை நாம் உடைத்தெறிய முன்வர வேண்டும்.

## வெளிச்சத்துக்கு....

அன்புள்ள தோழி,

தனிமை!—கவிதைக்குப் பிறகு, நான் மிகவும் நேசிக்கிற தனிமை தற்காலிகமாகக் கிடைத்திருக்கிற ஒரு சந்தர்ப்பத்தில்—எவ்வளவோ எழுத வேண்டும் என்ற ஒரு ஆர்வத்தோடு இந்த மடலை எழுத ஆரம்பிக்கிறேன்....

... "இப்படித்தானே நடக்கும்!" ... "இதுதானே நியதி!..." என்பதாக இந்தச் சமூகம் ஏற்றுக்கொண்டிருக்கிற — கொஞ்சம் ஆழமான பார்வையில், அறிவு பூர்வமாகச் சிந்தித்தால் என்னவாம் என்கிற நினைவே அநேகருக்கு எழாதபடி அவ்வளவு தூரம் இயல்பாகிப் போய்விட்ட — பல செயல்களும் நடைமுறைகளும் அப்படிச் சிந்திக்கப்படுகிறஇடத்து எவ்வளவு பரிகசிக்கத்தக்க விசித்திரங்களாக இருக்கின்றன என்பதை இயல்பாகவே புரியும் என்னுடைய இலக்கிய இதயம், வலிக்கிற பொழுதுகளில் இடையிடை நான் எழுதுகிறேன்.

**நண்பரொருவர் தமது சிநேகிதிக்கு எழுதிய கடிதத்திலிருந்து**

ஃ ஃ ஃ

நெடுங்கேணிச் சந்தியில் ஒரு தேனீர்க்கடை. பல தடவைகள் காத்திருக்கிற பொழுதுகளில் எல்லாம் இதனுடைய பெயர்ப்பலகை கண்ணில் படும். ஒவ்வொன்றும் ஒரு அடி உயரமான தனித்தனி ஆங்கில எழுத்துக்களில் "ARUMUGAM CAFE" என்று போட்டு, அதன் கீழ் சின்னதாக, கவனித்துப் பார்த்தாலே தெரியக் கூடிய மாதிரி தமிழிலும், சிங்களத்திலும் "ஆறுமுகம் கபே" என்று எழுதப்பட்டிருக்கிறது, மிகவும் சின்ன விஷயம்தான். அந்தச் சந்தியில்

பிரயாணிக்கிறவர்களில் 90 சதவீதமானவர்கள் ஆங்கிலம் வாசிக்க முடியாதவர்களே என்பது அந்த ஊரை அறிந்தவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் —ஏன்—அந்தக் கடைச் சொந்தக்காரனோ அல்லது பெயர்ப்பலகையைத் தயாரித்த தொழிலாளியோ, ஓவியனோ கூட ஆங்கிலத்தில் பரிச்சயமானவர்களாக இருப்பார்களோ என்பது சந்தேகமே. இந்நிலைமையில், அவசியமான ஒரு நோக்கமுமே இல்லாமல், அந்தப் பெயர்ப் பலகையில் ஆங்கிலத்துக்கு அவர்கள் கொடுத்திருக்கிற முக்கியத்துவம்,—காலனித்துவ ஆட்சி எங்களுக்குள் விதைத்து எங்களில் ஊறிப்போயிருக்கிற ''ஆங்கிலமே பெரிசு'' என்கிற ஒரு பிரேமையில் விளைந்த அடிமைத்தனத்தின் ஒரு அடையாளச் சின்னமே. இந்தப் பெயர்ப்பலகை எழுதப்படுகிற காலத்தில்—''ஆங்கிலத்தில் எழுதத்தேவையில்லையே'' என்று ஒருவர் சொல்லப் போய், ஆங்கிலத்தில் பெரிதாக எழுதினால் தான் கடைக்கு ஒரு சிறப்பு என்று முதலாளி வாதாடி இது நடைமுறைப்பட்டிருந்தால் கூட இது ஒரு ''பிரச்சினை'' என்ற வடிவெடுத்திருக்கிறதே என்கிற அளவில் திருப்திப்பட்டிருக்கலாம். கடைக்கு ஒரு பெயர்ப் பலகை எழுத வேண்டுமே என்று முதலாளி சொல்ல—ஓவியன் எல்லோருக்கும் எழுதுவதுபோல் எழுதி வந்து மாட்ட,—இன்றுவரை அதைக் கடந்து செல்லும் எவருமே ஒரு வித்தியாசமும் இல்லாமலேயே அதை நோக்க — பாருங்கள்! எவ்வளவு இயல்பாகி போய் விட்ட அடிமைத்தனத்துக்குள் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ''மொழி'' என்பது சிந்தனையை வெளிப்படுத்துகின்ற ஒரு கருவி மட்டுமே. சிந்தனையின் அளவிற்கு எந்த மொழியுமே வளர்ந்து விடவில்லையாயினும், ஒரு பரிச்சயமான மொழியில், முதலாளி வாடிக்கையாளர்களோடு தொடர்பு கொள்ள மறுத்து, மொழியின் ஆதிக்கத்தில் சிந்தனையைக் குறுக்கி வைத்திருக்கிற பரிதாபகரமான நிலைமை மிகவும் வேடிக்கையானது இல்லையா?

—நிலா—

---

தொடர்புகளுக்கு:-

## ''தோழி''

**ஆனந்தக்குமாரசுவாமி விடுதி**
சேர். பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# மனைவியை — அடித்தல்

இந்தியாவில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த சில நிறுவனங்கள் அண்மையில் மனைவிமார்களைக் கணவர்கள் அடிப்பது குறித்து பல்வேறு வாழ்க்கைப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களை நேரடியாகப் பேட்டி கண்டன. பேட்டி தந்தவர்களில் எஞ்சினியர்கள், டாக்டர்கள், பேராசிரியர்கள், நீதிபதிகள் ஆகியவர்களின் மனைவிகளும் அடங்குவர்.

பேட்டி தந்த முந்நூறு பேர்களில் அடிவாங்காத பெண்களே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் கல்யாணமாகி ஆறு மாதத்திற்குள்ளாகவே முதல் தடவையாக அடிபடுகின்றனர். இவர்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவுக்கான காரணங்களில் பணம், அதிகாரம், பால்சம்பந்தமான பிரச்சினைகள், மாமியார், மாமனார், நாத்தனார் பிரச்சினைகள் ஆகியவை பிரதானமாக உள்ளன. முதன்முறையாக அடிபடும்போது பெண் நிலைகுலைந்து விடுகிறாள். கடுமையான ஆத்திரமும் எதிர்ப்புணர்வும் அவளிடம் தலை தூக்குகிறது. எதிர்பார்க்காத இந்நிகழ்ச்சியை நினைத்துக் குமுறுகிறாள். பலர் கணவனிடம் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்கோ, நண்பர்கள் வீட்டிற்கோ செல்கின்றனர். அவ்வாறு அவர்கள் சென்றவுடன் கணவனோடு ஒத்துப் போகும்படி அவர்களும் உபதேசம் செய்கிறார்கள். அதனால் மீண்டும் கணவனிடமே திரும்புவதைத் தவிர வேறு வழி இல்லையென உணர்கிறாள். இவ்வாறு அவள் திரும்புகின்றபோது மேலும் கடுமையான கட்டுப்பாடுகளை கணவன் விதிக்கிறான். அவளுக்கு முன்பு இருந்த கௌரவ நிலை சரியத் தொடங்கி அதிகமான கட்டுப்பாட்டுக்குள் அடங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

அடித்த பின் சமாதானப்படுத்த ஏதாவது பொருட்களை வாங்கித் தருவது, சினிமாவுக்குக் கூட்டிச் செல்வது, அனுதாபத்துடன் பேசுவது போன்ற முறைகளைக் கணவன் கையாளுகிறான் அது அவளுக்கு ஓரளவுக்கு மன நிம்மதி அளிக்கிறது.

ஆதரவற்ற சமுதாய நிலைமைகள் எதிர்ப்புணர்ச்சியை மழுங்கடித்து அவளை நடைப்பிணமாக்குகிறது. எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டும்போது பல்வேறு சித்திரவதைகளுக்கு பெண்கள் ஆளாகின்றனர். கை விரல்களை ஒடிப்பது, மூட்டுக்களைப் பிசகச் செய்வது, சூடு போடுவது, கர்ப்ப நிலையில் உதைத்து கருச்சிதைவை உண்டாக்குவது, கட்டிப்போட்டு பல்வேறு வகையான விவரிக்க முடியாத செயல்களைச் செய்வது, தீயிட்டுக்கொளுத்துவது — இவைகள் குடும்ப வாழ்க்கையைச் சித்திரவதைக் கூடங்களாக மாற்றி விடுகின்றன.

இதற்கு முழுமையான தீர்வினை ஓர் சமுதாய மாற்றத்தின்மூலமே கொண்டுவரமுடியும் என்பது தெளிவு.

பெண்ணைப் போற்றுகிறேன் என்பவன் அல்லது பெண்மையை வணங்குகிறேன் என்பவன் அயோக்கியனாக அல்லது பொய்யனாக இருப்பான். பெண்ணை - பெண்ணாகக் கருதுபவன்தான் - அதுவும் மனிதகுலத்தின் ஒரு உயிர் என்பதை விளங்கிக் கொள்பவன்தான் உண்மையான மனிதநேயம் உள்ளவனாகிறான்.

---

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது.

— ஆபிரகாம் இலிங்கன் —

---

★

'தோழி'—

தமிழ்பேசும் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு ஊட்டிட எமது வாழ்த்துக்கள்!

யூனிவேர்சல் றேட்ஸ்;
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

★

தோழிக்கான அமைப்புத் தொகுப்பு:
செல்வி எஸ். தியாகராசா

சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் அச்சகப் பகுதி
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.